உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - ஐப்பசி 10—11—61 { இதழ் 12

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

கந்தன் கருணை

விரதங்களை மேற்கொண்டு உடல் வளத்துடன் உயிர் வளம் பெருக்கிக் காப்பதில் தமிழ்மக்கள் தலைசிறந்தவர்கள். தம் உயிர்வளம் காத்து அங்கே அறநெறிபேணும்பொருட்டே தக்க பல நோன்புகளைத் தமிழ் மக்கள் மேற்கொண்டுள்ளார்கள். 'ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கி' என்ற திருவாசகநெறி காணும்நிலை இது என்று கூறலாம். இந்த நெறியில் ஐப்பசி மாதம் பிறந்ததுமே துலா நீராடலும் தோன்றிவிடுகிறது. ஒவ்வொருவரும் வைகறையில் எழுந்து சிவசிந்தனையுடன் புனித நீரில் முழுகி வழிபடும் சிறப்பு

எல்லா மாதங்களுக்கும் உண்டேனும் ஐப்பசி மாதத்திற்கு மிகச் சிறப்பு. துலா நீராடுவதற்குச் சிறந்த தலமாக மாயூரம் விளங்குகின்றது. 'துலாக்கட்டம்' என்ற தீர்த்தக்கட்டம் மாயூரத்தில் காவிரியாற்றில் விளங்குகின்றது.

இந்த மாதத்திற்கு மற்றுமோரு சிறப்பு கந்தசஷ்டி ஆகும். ஆறு நாட்கள் உண்ணுநோன்பு மேற்கொண்டு முருகப்பெருமானை வழிபட்டு இருமைப்பயனும் எய்துவர் தமிழர். கந்தபுராணத்தை ஒருமுறை படித்தலையும் இந் நன்னாட்களில் மேற்கோள்வர் மேலோர். பொதுவாக எங்கும் இந்தச் சஷ்டித்திருநாள் சிறந்ததாயினும் ஆறுபடை வீடு களில் வழிபடுதல் கந்தன் கருணைபெற மிகச் சிறந்ததாகும். திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோருடல் என்பன ஆறுபடை வீடுகளாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் திருவேரகம் சோழநாட்டுச் சுவாமிமலை என்றும், மலை நாட்டின்கண் ஒரு பதி என்றும் இருவகையாகக் கூறுவர். பழமுதிர்சோலை மதுரையைஅடுத்துள்ள அழகர்கோயிலாகும். அங்கே முருகப்பெருமான் எழுந்தருளி அருள் வழங்கும் சிறப்பைத் திருமுருகாற்றுப்படை தெளிவாகக் கூறியுள்ளது. இந்த ஆறு திருப்பதிகளைக் குமரகுருபர சுவாமிகளும் போற்றியுள்ளார்.

" ஆறுதிருப்பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கோண்டேன் " (கந்தர் கலிவெண்பா)

கந்தசஷ்டித் திருநாள் ஆண்டுதோறும் வருகிறது. அந் நாட்களில் ஆறுபடை வீடுகளைத் தரிசனம் செய்து முருக நாமத்தை ஓதி இருமைப்பயன்களை எய்துதல் அனைவர் கடமையுமாகும்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கந்தசஷ்டித் திருநாளில் திருச்சேந்தூரில் தங்கி யிருந்து முருகவழிபாடு நிகழ்த்திவரும் அருள்திறம் உடைய வர்கள். பல அடியார்களையும் உடன்கோண்டு அருள்

பாலிக்கும் பெருங்கருணைவாய்ந்தவர்கள். ஆதீன ஆட்சிக்கு உட்பட்ட தேவஸ்தானங்களிலும் கந்தசஷ்டித் திருநாளைச் சிறப்புற நிகழ்த்திவரும் செந்தண்மை உடையவர்கள். அவர்கள் அருள்வழிநின்று தமிழ் மக்கள் கந்தன் கருணை பெற்று இன்புறுவார்களாக.

வரங்கொண்ட உமைமுலைப்பால் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறைஇறைஞ்சும் சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன் கண்ணைவிட்டு நீங்காவே.

— திருச்செந்திற்கலம்பகம்.

திருமுறை இன்னிசைவாணர்,

வேலூர், க. சோக்கலிங்கம்.

பண் - வாசஸ்பதி] [பாணி - ரூபகம்

பண்ணியல்

எங்களைக் கடைக்கண் பார்க்கவேணும் ஐயா
எட்டுகுடிப் பதிவாழும் பன்னிரு கையா (எங்)

துணைப் பண்ணியல்

ஐங்கரன் சோதரா அம்பிகைசெல் வக்குமரா
மங்கள ரூபஹாரா மயிலேறிய வீரா (எங்)

பண்ணியல் முடிவு

கலியுக வர்தா காத்தருள வாவா
வலியளை ஆண்டவா வரமிகத் தாதா
நிலையான தெய்வம்நீயே நினைத்தவுடன் வருவாயே
அலைமோதுங் கரையே அன்பாய் அமர்சேயே (எங்)

முத்தமிழை அகத்திய முனிவர்க்கு உரைத்தநாதா
சித்தம் இரங்கியிங்கே அருள்தர லாகாதா
பத்தர்கட்கு வரமருளும் பாலஞான விநோதா
அத்தனுக்குப தேசித்த அறுமுகா இன்னும்வாதா. (எங்)

* புள்ளிருக்குவேளூர்த் தலவிளக்கம்

வித்துவான்,

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

தலப்பெயர்க்காரணமும் இருப்பிடமும் :

சைவசமயாசாரியார்களால் பாடப்பெற்ற சிவஸ்தலங்கள் இருநூற்றெழுபத்துநான்கு. அவற்றுள் சோழவளநாட்டில் அமைந்து விளங்குவன நூற்றுத்தொண்ணூறு. அவற்றுள்ளும் காவிரியின் வடகரையில் அமைந்து அருள் சுரக்கும் தலங்கள் அறுபத்துமூன்று. அவற்றுள் பதினாறுவது தலமாக விளங்குவது வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் புள்ளிருக்குவேளூர். இத்தலம் தருமையாதீன அருளாட்சியிலுள்ள இருபத்தேழு திருக்கோயில்களுள் முதன்மையாக விளங்குவது. புள்=சடாயு என்ற பறவையும், இருக்கு=இருக்கு என்ற வேதமும், வேள்=முருகப் பெருமானும், ஊர்=ஊர்ந்துசெல்லும் சூரியனும் இத்தலத்து இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றமையால், இது புள்ளிருக்கு வேளூர் எனப் பெயர்பெற்றது. மனிதரால் தீர்க்கமுடியாத உடல் நோய்களையும், உயிர் நோயாகிய பிறவிநோயையும் தீர்த்தருளும் வயித்தியநாதப்பெருமான் இங்கு எழுந்தருளி அருள் வழங்குவ தால் இவ்வூர் வைத்தீசுவரன்கோயில் என வழங்குகிறது. இது சிதம்பரத்திலிருந்து மாயூரம் செல்லும் இருப்புப்பாதையில் '' வைத்தீசுவரன்கோயில் '' என்ற பெயரில் புகைவண்டி நிலைய மாகவும் அமைந்துள்ளது. இந்நிலையத்திலிருந்து அரைமைல் தூரத்தில் கோயில் இருக்கிறது. இரயிலில் இருந்தபடியே திருக் கோபுர தரிசனம் செய்யலாம். சிறந்த பிரார்த்தனைத் தலங் களுள் ஒன்றாக இலங்குவது.

தலத்தின் சிறப்பு :

இங்கு வேப்பமரம் தலவிருக்ஷமாக விளங்குகிறது. நவக் கிரகங்களுள் ஒன்றான அங்காரகன் (செவ்வாய்) இவ்விறை

* 8—11—61 முதல் கந்தசஷ்டி விழா இத்திருக்கோயிலிலும், மாயூரம் குமரக்கட்டளையிலும் சிறப்பாக நடைபெறுகிறது.

வனைப் பூசித்துத் தனக்குற்ற செங்குஷ்டநோய் நீங்கப்பெற்றமை யால் அங்காரக க்ஷேத்திரமாகவும் விளங்குவது. இங்கு நவக் கிரகங்கள் ஒன்றன்பக்கத்து ஒன்ருக, வரிசையாக அமைந்துள் ளன. கோள் வலியற்ற இடங்களில்தான் இம்முறையில் நவக் கிரகங்கள் அமைந்திருத்தலைக் காணலாம். இத்தலத்தில் சம்பாதி, சடாயு என்னும் கழுகரசர்கள் இறைவனைப் பூசித்துப் பேறுபெற்றனர். இத்தலம் சமயாசாரியர்களுள் திருஞானசம்பந்த ராலும், திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற சிறப்புடையது. தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவ ஞானதேசிக சுவாமிகளின் திருவருட்பா நூலொன்றும், குமர குருபர சுவாமிகளின் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றும், படிக்காசுத் தம்பிரான் சுவாமிகளின் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்ற நூலும், வடுகநாத தேசிகர் இயற்றிய புள்ளிருக்குவேளூர்ப் புராணமும், காளமேகப் புலவர் பாடிய சில தனிப்பாடல்களும், அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல் களும் இத்தலத்திற்கு உள்ளன.

முக்கிய மூர்த்திகள் :

இத்தலத்தில் இறைவன் வயித்தியநாதர் என்ற திருப்பெய ரோடும், இறைவி தையல்நாயகி என்ற திருப்பெயரோடும் விளங்குகின்றனர். சுவாமிசந்நிதி மேற்கு நோக்கியும், அம்மை சந்நிதி தெற்கு நோக்கியும், முத்துக்குமாரர் சந்நிதி கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. கயிலை இறைவன் உயிர்களைத் துன்புறுத்தும் நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தெட்டு வியாதிகளை யும் தீர்க்கத் திருவுளங்கொண்டார். அதற்கேற்ப தையல்நாயகி அம்மையார் தைலபாத்திரமும், சஞ்சீவியும், வில்வமரத்து அடி மண்ணும் எடுத்துக்கொண்டு அவருடன் வந்தார். இறைவன் தீராத நோயெல்லாம் தீர்த்தருளி இத்தலத்தில் வைத்தியநாதராக எழுந்தருளினர். பேய்பிடிக்கப்பெற்றோர் அம்மை சந்நிதானத்தில் சென்று வழிபட்டுப் பேய்ப்பிடியினின்றும் விடுதலை பெறுகின் றனர். (ஏழாண்டுகட்குமுன்னர், குருடாயிருக்கும் ஒரு ஐயங்கார் பெண் அம்மை சந்நிதியில் கண் தெரியப்பெற்ருர்.) தாயும் தந்தையும் சேயைப் (முருகனைப்) போற்றும் முறை இத்தலத் திற்கே உரிய தனிச்சிறப்பாகும். கோயிலும், கோயில் நிலங் களும், மற்றைய பொருள்களும் வயித்தியநாதசுவாமி பெயரி லேயே இருப்பினும், வழிபாட்டுச் சிறப்பும் திருவிழாச் சிறப்பும்

குமாரராகிய முத்துக்குமாரசுவாமிக்கே உரியனவாக விளங்குகின்றன.

முத்துக்குமாரர் :

முத்து என்பது நவமணிகளுள் ஒன்று. தமிழகத்தின் தனிப்பெருஞ் சொத்து. கிடைத்தற்கு அரியது. இதன் பொருள் பேரழகு வாய்ந்தது, பேரின்பம் நல்குவது, விடுபட்டது என்பனவாம். முருகப்பெருமானைக் குமாரன் என வழங்குதல் எங்கும் காணலாம். முத்துக்குமாரன் என்றும், முத்தையா என்றும வழங்குவது இத்தலத்திற்கே உரிய தனிச் சிறப்பாகும். இதற்குக்காரணம், கிடைத்தற்கு அருமையான முத்தைப் போன்றவன் என்பதும், தமிழகத்தின் தனிப்பெருஞ் சொத்தாகிய முத்தினைப்போல் தமிழகத்தின் தனிப்பெருங்கடவுள் முருகன் என்பதும், துன்பங்களிலிருந்து விடுவித்துப் பேரின்பம் அளிப்பவன் என்பதுமாகும். அருமையான பிள்ளை என்பதை "ஆனேறுயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும் அருமருநதாகி, நின்ற ஆதிப்பிரான்" என்று குமரகுருபரர் குறிப்பிடுவதால் தெளியலாம். அருமையானவராதலால் செல்வமாகவே திகழ்கின்றார். இதனையும் குமரகுருபரர் "மலைப்புதல்வி செல்வக் குமார நாயகன் வருகவே" என்ற தொடரால் குறிப்பிடுகிறார். தருமைக் குருமகாசந்நிதானமவர்கள், அல்லது அவர்களது பிரதிநிதிகளான தம்பிரான் சுவாமிகள் இல்லாமல் முத்துக் குமாரரை எழுந்தருளச்செய்வது இன்றுவரை வழக்கமின்று. இவ்வாறு எழுந்தருளுங்காலத்து முதலில் வயித்தியநாதர் சந்நிதி சேர்ந்து தந்தையிடம் உத்தரவுபெற்று, பிறகு தையல்நாயகி சந்நிதி சேர்ந்து தாயிடம் உத்தரவுபெற்றுச்செல்வதும், மயில், விசிறி முதலிய உபசாரங்கள் நிகழ்வதும் தொன்றுதொட்டுவழங்கி வருகின்ற தனிப்பெருங்காட்சியாகும். இவற்றாலும் செல்வக் குமாரன் என்பது தெளியப்பெறும். தருமைக் குருமணியின் கருணைப்பெருக்கால் செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில் நவரத்தினக்கவசம் அணிவிக்க ஏற்பாடாகி அதன்படி திருப்பணி நடைபெற்றுவருகிறது. அன்பர்கள்பலரும் அப்பணிக்குப் பொருளுதவிபுரிந்து அருள்மிகப்பெறுவார்களாக.

சந்தனக் குழம்பும், நேத்திரப் பிடியும் :

முத்துக்குமாரர், கிருத்திகைதோறும் சந்தனக் குழம்பு மண்டபம் என வழங்கும் ஆஸ்தான மண்டபத்திற்கு எழுந்தருளி

அபிஷேகம் கொள்வார். இங்குச் சந்தனக்குழம்பு அபிஷேகம் கொள்வார். இங்குச் சந்தனக்குழம்பு அபிஷேகம் மிகச் சிறப்பானது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வபிஷேகத்தைக் கண்குளிரக் கண்டு தரிசித்துச் சந்தனக்குழம்பு பெறுவார்கள். பெற்ற சந்தனக்குழம்பை அடுத்த கிருத்திகை வரையில் ஒவ்வொருநாளும் சிறிது சிறிது பருகிவருவார்கள். இதனால் பிணிநீங்கிப் பெருமையுற்றோர் பல்லாயிரவராவர். ஒவ்வொரு நாளும் முத்துக்குமாரருக்கே அர்த்தசாம பூஜை சிறப்பாக நடைபெறும். இதைப் புழுகாப்பு என வழங்குவர். பூஜை நிறைவில் நறுமணமுள்ள திருநீறும், சந்தனப்பிடியும் திருவடிகளில் சேர்ப்பிக்கப்பெறும். இதனை நேத்திரப்பிடி என வழங்குவர். இதுவும் பிணியகற்றும் பெருமருந்தாகும். வைகாசி மாதம் வரும் கிருத்திகையின் முன்னர் ஒரு மண்டலகாலம் காவிரித் திருமஞ்சனம் கொள்வர். எனவே அக்கிருத்திகை மண்டலாபிஷேகக் கிருத்திகை என வழங்கும். இவரது அருட்டிறத்தைக் குமரகுருபரர் ''மெய்கண்ட தெய்வம் இத் தெய்வ மல்லாற் புவியில் வேறில்லை என்று உணர்'' என்று அம்புலிக்கு அறிவுறுத்துவதால் அறியலாம்.

சித்தாமிர்தத் தீர்த்தம் :

சித்தாமிர்தத் தீர்த்தம், கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம் வில்வ தீர்த்தம், முனிவர் தீர்த்தம், அங்கசந்தான தீர்த்தம் என ஆறு தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. இவற்றுள் சித்தாமிர்தத் தீர்த்தமே மிகச் சிறப்புடையது. இது கோயிலுக்குள் தையல்நாயகி சந்நிதியில் அம்மையின் பார்வையில் அமைந்துள்ளது. சித்தர்கணம் இறைவர் திருமுடியில் அபிஷேகித்த தேவாமிர்தம் இதில் கலந்தமையால் இது சித்தாமிர்தம் எனப் பெயர்பெற்றது. ஒரு அந்தணனின் வெண் குட்டத்தையும், அங்காரவனின் செங்குட்டத்தையும் போக்கியது இத்தீர்த்தமேயாம். ''சித்தாமிர்தத் தடத் தீர்த்தத்துறைக் குறுந் திவலை ஒன்றே அமையும்'' என்ற குமரகுருபரர் வாக்கினாலும் இதன் பெருமையை உணரலாம்.

திருச்சாந்துருண்டை :

நோய் நீக்கம் பெற விரும்புவோர் வளர்பிறையில் நல்ல நேரத்தில் அங்க சந்தானத் தீர்த்தத்தில் நீராடி அதன்

நடுவிலுள்ள மண்ணைப் புதுப்பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு ஆலயத்திற்கு வருவர். வந்து விபூதிகுண்டத்திலுள்ள விபூதியையும் சித்தாமிர்தத் தீர்த்தத்தையும் அதனுடன் கலந்து ஐந்தெழுத்தைச் செபித்துக்கொண்டே முத்துக்குமாரர் சந்நிதியில் உள்ள குழி அம்மியில் வைத்து அரைத்து உளுந்தளவாக உருண்டைகள் செய்வர். செய்தவற்றை அம்மை தையல் நாயகியின் திருவடியில் வைத்து அருச்சனை செய்வர். பிறகு சித்தாமிர்தத் தீர்த்தத்தோடு நியமமாகக் கலந்து உண்பர். இதனைத் திருச்சாந்துருண்டை என வழக்குவர். இதனால் தீராத வினைகளெல்லாந்தீரப்பெறுவர்.

பேரா யிரம்பரவி வானோர் ஏத்தும்
　　பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கு(கு)என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
　　மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
　　திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
　　போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே,

—திருநாவுக்கரசர்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

I have great pleasure to state that I am very lucky to visit this temple with my family and children. South India is famous for Temples. This temple is very unique in as much as it is kept in very clean and austex manner. The authorities in charge are very cordial. I cannot forget the visit to this temple.

(Sd.) C. E. Kumaradev,
Applellate Asst. Commissioner,
Commercial Taxes, (Madras).

14—10—61

திருநாவுக்கரசரின் திருவுள்ளம்

வித்துவான்,

திரு. க. செ. அருணாசல முதலியார்

"தென்னாடுடைய சிவனே போற்றி" என்று திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமானால் சிறப்பிக்கப் பெற்ற நமது தெய்வத் தமிழகத்தின்கண் தோன்றிய சான்றோர் பலராவர். அவர்களுள்ளும் நமது சைவ சமயாசாரியர்களான நால்வரும் தீதகன்றுலகமுய்யத் திருவவதாரஞ்செய்த சீராளராவர் இந் நால்வரும் நமது தெய்வத் தமிழ் நாட்டில் திருவவதாரஞ் செய்ய வில்லை யென்றால் வெண் திருநீற்றின் விளக்கம். தேவார திருவாசகங்களாகிய தெய்வத் திருமறைகள், ஐந்தெழுத் துண்மை ஆகிய இன்ன பிறவற்றின் சிறப்பியல்புகளனைத்தை யும் யாம் அன்றும், இன்றும், இனியென்றும் அறியோமென்பது உண்மை. இதனை

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தை பிரா னஞ்செழுத்தெங் கே"

என்ற பாடல் நமக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

எனவே, நல்லொழுக்கங்களை நவிலும் நான் மறைகளின் சாரங்களை யெல்லாம் நமக்குத் தேவாரத் திருவாசகங்களின் வாயிலாக வடித்துத் தந்த அவதார நன் மணிகளான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மாணிக்கவாசகர் என்ற நமது சைவ சமயஸ்தாபகர்களான நால்வரும் நான்கு வகைப் பட்ட சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களின் மூலம் உலகத்துயிர்களை ஊட்டி வளர்க்கும் அன்னை பராசக்தி காண ஐந்தொழில் தாண்டவம் புரியவல்ல தம்பிரானுருக்கு அன்புசெய்து. அவனருளாலே வலிய ஆட்கொள்ளப்பெற்று நமது செந்தமிழ்நாட்டில் செயற்கரிய பல அற்புதச் செயல்களைச்

செய்த செம்மல்களாவர், இப்பெரியார்கள் பெருமைகளை யெல்லாம் தெய்வச்சேக்கிழாரடிகள் தாம் அருளிச்செய்த திருத் தொண்டர் புராணத்தாலும், பரஞ்சோதியடிகளாரின் திருவிளை யாடற் புராணத்தாலும் பரக்கக் காண்கின்ரேம். அன்றியும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த 'நால்வர் நான்மணிமாலை' என்ற நூலின் வாயிலாகவும் இப் பெரியார்களின் பெருமைகளை யெல்லாம் சுருங்கிய முறையில் அறிந்து கொள்வதுடன் அவர்கள் பக்கல் என்றும் மாருத நமது பேரன்பைப் பிணைத்துவிடத்தக்க வகையில் அந்நன்னூல் சொற் சுருக்கமும், பொருட் பெருக்கமும் செந்தமிழ்ச் சுவையும், யாநயமும், பத்திச்சுவையும் மிகவும் அமையும் வண்ணம் ஆக்கப்பட்டுள்ளதையும் யாம் அறிவோம்.

சிவபரனருளால் இவ்வுலகமுய்யத் தோன்றிய நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசரின் திருவுள்ளக் கருத்துக்களைச் சிறியேனுடைய சிற்றறிவிற்கு எட்டியமட்டும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்ட விழைகிறேன்.

செந்தமிழ் வழங்கும் நமது தென்னுட்டின்கண் ஒரு பகுதி யாக விளங்குவது திருமுனைப்பாடி நாடு. நல்லொழுக்கத்தின் நலஞ்சிறந்த நன்மக்கள் பலருறையும் நன்மாடச் செழும்பதிகள் பலவற்றைத் தன்னகங்கொண்டு தழைத்திருப்பது அத்திருநாடு. இத்தகைய நன்னுட்டில் எல்லா வளங்களும் எய்தி அவநெறியிற் சென்றுழலாத சிவநெறிச் சீலர்களைப் பெற்றுத் திகழ்வது திருவாமூர். அத்திருவுறையுந் திருப்பதியில் ஏழாம் நூற்ருண் டில் சைவ வேளாண்மரபில் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், கடவுட்கொள்கை இன்னபிறயாவும் நன்கு கைவரப்பெற்ற நற்புகழாளர், புகழனுர் என்னும் பெரியாராவர். அவர் தம் உள்ளக் கருத்துக்கு ஒத்தும், தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்தும், அன்பையும், அறத்தையும் அமைவுறக் கொண்டும் இங்ஙனம் மனையறத்துக்குத்தக்க மாட்சிகள் அனைத்தையும் அணிகலன்களாக மன்னுறக்கொண்டு விளங்கும் மாதர்களுள்ளும் இனி இவரினும் சிறந்தார் யாருளர்? என்ற வினுவுக்கு ஏற்ற இலக்கியமாகத் திகழும் இல்வாழ்க்கைத் துணைவியார் மாதினியார் என்னும் மங்கையர் திலகமாவர்.

இத்தகைய நல்லோர்பால் திலகவதியார் என்ற நற் குணவதியார் திருமகளாகத் தோன்றிய சில்லாண்டுகட்குப்

பின்னர் பவநெறி பாழுற்றுத் தவநெறி தழைத்தோங்க மருணீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமத்துடன் வாகீசர் திருவவதாரஞ்செய்தார்.

இவர் இளமையிலேயே பெற்றோர்களை இழந்து, கற்க வேண்டியவற்றைக் கற்றுத் தேர்ந்து, ஈசனருளாமையினால் சமணசமயச்சார்புற்று, அப்பொன்மணிநூல் தாங்காது அனைத் துயிர்க்கும் அருள்தாங்கி நின்ற அன்னையினும் சாலச்சிறந்த அரிய தமக்கை திலகவதியார் தாம் அடிமை பூண்டொழுகும் அருளாளன்பால் தம்பியராம் தனது இழிநிலைக்கிரங்கிக் குறையிரக்க, அப்பரமனால் சூலைநோயைக் கொடுத்துத் தடுத்தாட் கொள்ளப்பட்டு, திருவதிகை வீரட்டானரின் திருமுன்பு 'கூற்றாயின வாறு விலக்ககலீர்' என்று தொடங்கும் தேவாரத் திருப் பதிகத்தை உள்ளம், உடல், உயிர் ஆகிய இவை மூன்றும் ஒருங்கேஉருகத்தக்கவகையில் ஓதினார். அதனால் ஆட்கொள்ளப் பட்ட அத்தனுடைய அருள்வாக்கினாலேயே 'திருநாவுக்கரசு' என்ற சிறப்புப் பெயர் அருளப்பெற்றார். திருஞானசம்பந்தரால் 'அப்பரே' என்று அழைக்கப்பெற்றார். சமணசமயச் சார்புநீத்து சைவசமயச் சாற்புற்ற காரணங்கருதி வெகுண்டெழுந்த சமண சமயத் தலைவர்களின் துர்ப்போதனைக்கிரங்கி மகேந்திரவர்ம பல்லவனால் தரப்பட்ட கொடுந்தண்டனைகட்கெல்லாம் ஐந் தெழுந்து மந்திரத்தால் தப்பிப்பிழைத்தார். இத்தென்னாட்டில் மட்டுமல்லாமல் வடநாட்டிலுமுள்ள சிவாலயங்கள் பலவற்றிற் கும் சென்று பதிகம் பாடிப்பரவி "தன்கடன் அடியேனையுந் தாங்குதல் என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்று உறுதி மிக்க உள்ளத்துடன் உழவாரத் திருப்பணிபுரிந்து, செயற்கருஞ் செயல்கள் பலவற்றைச்செய்தார். திருக்கயிலைத் தரிசனத்தைத் திருவையாற்றில் கண்டு களித்து, தமது எண்பத்தோராவது ஆண்டில் திருப்புகலூர்ப் பதியையே புகலிடமாகக்கொண்டு, ஓட்டையும் பொன்னையும் ஒன்றெனக் கண்டு, கல்லையும் மணியையும் புல்லென மதித்து, அரம்பையர் உறவைத் துரும் பெனத் தூற்றி, அன்றரன் நடாத்திய அரியதோர் தேர்வில் நானில மதிக்க நல்லதோர் தேர்ச்சியைப் பெற்றுப் "புண்ணியா உன்னடிக்கேபோதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே" என்று அழுது அரற்றியவாறே தம்மை ஆட்கொண்ட அந்த அண்ணலைப் போற்றிப் புகழ்ந்து அப்பரமனுடன் இரண்டறக்

கலந்து பேரின்பப் பெருவாழ்வைப் பெற்ற பெரியார் திருநாவுக்கரசராவர்.

திருநாவுக்கரசர் தாம் அவனருளாலே அருளிச்செய்த அற்புதத் தேவாரத் திருப்பதிகங்களில் காணும் ஒருசில பாடல்களின் வாயிலாகவே அவருடைய உள்ளக் கருத்துக்களுள் ஒருசிலவற்றை ஈங்குக் காண்போம். " நெஞ்சம் உமக்கே இடமாகவைத்தேன் நினையா தொருபோதுமிருந்தறியேன் " என்ற தொடரினால், எம்பெருமானே! அடியேனுடைய உள்ளத்தைத் தாங்கள் உறையுங் கோயிலாகவே ஆக்கிவிட்டேனென்றும் எனது வாழ்நாட்களுள் ஒருநாளேனும் நின்னை நினைக்காமல் இருந்தேனில்லையே! என்றும் கூறுவதில் அவருடைய உள்ளத்தின் உருக்கத்தையும், உறுதியையும் ஒருங்கே காண்கின்றோம். மேலும்,

" சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமமென் னாவின் மறந்தறியேன் "

என்ற இவ்விரண்டடிகளால் நின்னை எந்நாளும் தூயநீரால் ஆட்டியும், நல்ல பூக்களைக்கொண்டு அருச்சித்தும், தூபதீபங்களால் ஆராதித்தும் வணங்கி வழிபாடு செய்வதில் ஒரு சிறிதும்தவறமாட்டேன். நின்திருமுன் நின்று செந்தமிழாலான இன்னிசைப் பாக்களைப் பாடிப் பரவுதலிலும் ஒருபொழுதும் வழுவமாட்டேன். எனது வாழ்விலும் தாழ்விலும் நின்னை மறக்காமலேயே உனது திருநாமங்களை நாவாரப் பலகாலும் சொல்லிச் சொல்லித் துதிப்பேன் என்று பாடுவதில்தான் அவருக்கு எவ்வளவு ஆர்வம்?

நம் நாவரசர் ஒருசமயம் திருவாரூர் தியாகராசராகிய புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றித் துதிக்குங்கால் தம் நெஞ்சத்துக்கு அறிவுறுத்தும் வாயிலாக நமக்கு அறிவுறுத்தும் ஒரு உயரிய பாடலின் உட்கருத்தை ஈங்கறிவோம்.

(தொடரும்)

மருத நாட்டு மங்கை

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் B. A.

(மலர் 20, இதழ் 11, பக்கம் 656 இன் தொடர்ச்சி)

ஓங்கியுயர்ந் திடுங்களிற்றின் மேலே ஏறி
ஒருவள்ளு வன்முரசு முழக்கிச் சொன்னன் :-
" பாங்குறுந் தாய்நாட்டினுக்குக் காவல் கோரிப்
படைதிரண்டு விட்டதனுல், மகதத் தாரைத்
தாங்கிநின்று எதிராடிச் சாய்க்கத் தக்க
தமிழ்ப்படையிற் சிங்கங்காள் திரள்க இன்றே ! "
ஆங்காங்கு போர்ப்பறைகள் முழக்கி நிற்க
அணியணியாய் மருதத்தார் திரளலுற்ருர் ! 64

7. " மன்னரைக் காத்த மாவீரன் ! "

எயிற்கதவை அடைத்ததன்மேல் ஏறிநின்ருர்
ஏறனையார் எண்ணிறந்தார் ; வேலும் வில்லும்
அயிற்கருவி பலவும்தோற படைகள் தாமும்
ஆயத்த மாயேந்தி அரிமாப் போன்ருர்
துயில்விலராய் விழித்தபடி நிற்க லானுர் ;
தோடங்கிவிட்டார் ; கணைமாரி தூர்க்க லானுர் ;
பயில்கின்ற வேற்றரசர் படையின் வேள்ளம்
பயந்தலறிற் றேனும்போர் வெறிகூடிற்றே. 65

வெட்டுண்டு வீழ்ந்தனர்பல் மறவர் நாட்டு
வீரமேனும் நல்லேட்டில் இடமும் கொண்டார் ;
கட்டுண்டு வீழ்ந்தனபல் களிற்று வெள்ளம் ;
கண்முடித் திறப்பதற்குள் குருதி வெள்ளம் ;

மட்டுண்டு கிடப்பார்போல் மாற்ருர் வேலின்
மடியுண்டு கிடந்துலக்கை மறந்தார் சில்லோர் ;
தோட்டுண்டு பருந்தினங்கள் விண் பறந்து
தோடுவான நேடுமாலை யென்னத் தோன்றும். 66

இருதரப்பும் கடிதாகப் போரில் தத்தம்
இகல்வலியைத் தேளிவாக்கி நின்ற போது,
உறுமதிலில் உட்புறத்தே வீரர் ஆற்றும்
ஒளிர்வீரச் சேயல்கண்டு வந்தார் வேந்தர் !
திருமதிலின் புறமிருந்து பகைவர் வீசும்
திறத்தினுக்கு ஈடாக இப்புறத்தோர்
பேருவலியாற் ருங்கிநிற்கும் பேற்றி கண்டு,
பேருவகை கோண்டமரு தப்பர் மேலே. 67

கீழிருந்து வந்தவோரு கூர்வேல் பாயக்
கேடறிந்தான் போலிளைஞன் ஒருவன் கையிற்
சூழ்ந்திருந்த கேடயத்தால் இடையில் வீழ்ந்து
சுழற்றி நிறுத் திமைப்போதில் தடுத்துவிட்டான் !
சூழ்ந்திருந்தோர் வியந்துநின்ருர் ; அன்னேன் தன்னைச்
சோல்லியறிந் திடுமுன்னே படைவேள் ளத்தில்
வீழ்ந்துமறைந் தானந்த இளைய வீரன் !
வியந்துநின்ற பிறரேல்லாம் அயர்ந்து போனர் ! 68

நாட்டினுயிர் வேந்தரேனில், உயிரினுக்கு
நாசம்வந்த வேளையினில் தடுத்து நின்று
கேட்டினைப்போக் கும்மந்த மேலோன் யாராம் ?
கேண்மினெனப் புகழ்மாலை பாடி நின்ருர் !
முட்டிநின்ற பகைமனத்தின் மூள மூள
முந்திவரும் அரிமாப்போல் சுழன்று வேல்லும்
காட்டுமதக் களிறேஅவ் வீரன் என்றே
கருதிமறக் குலத்தோர்கள் களிப்புக் கோண்டார் ! 69

முதல்நாட் போர் இவ்வாறு முடிந்து போக
முற்றுகையிட் டார்மகதச் சேனவீரர் ;
புதல்சூழ்ந்த மதிற்புறத்துக் கோல்கள்நாட்டிப்
புதுத்துணியால் வேய்ந்திடும்பா சறைக்குள்சேன்ருர் ;

கதமுடையர் தமிழ்வீரர் இணையில்லாமற்
காட்டிவிட்டார் தந்திறனை என்றே யெண்ணி
மதவேழம் போன்றிருக்கும் மகத வேந்தன்
மனத்துயரால் பஞ்சணையில் கிடந்தே நைந்தான். 70

படையளவோ பெரிதில்லை ; நாடோ கொஞ்சம் ;
பண்புடைய நண்பர்பலர் உலவுகின்றார்;
இடையிடையே உளவறிந்தும் செய்தி கொண்டோம்;
எனினுமிந்த மருதநிலம் கைப்படாது
தடைப்படுதல் என்னேயென் றெண்ணி வேந்தன்
தன்னிருகண் மூடிமமை திறந்த வாறே
கடையடைத்துக் கிடந்தனன்பா சறைக்குள் ; வீரர்
கடைகாத்துக் கிடந்தார்கைக் கோலை ஏந்தி. 71

தமிழர்படைத் தரமறியா தெழுந்தீரேனும்
தன்மான மறவர்குலந் தன்னை வீழ்க்க
இமிழ்கடல்சூ ழுலகத்தில் எவரும் போந்து
எதிர்த்தணுவும் வெற்றிபெற்று மீண்டார் இல்லை;
உமிழ்கதஞ்சால் விழித்தீயில் போசுங்கிப்போனார்;
உம்நிலையும் அவ்வாறென் றுரைத்து வானில்
கமழ்ஒளியைக் கையடக்கி மறைந்தான் போலே
கதிரவனும் குடதிசையில் மறைந்தா னன்றே. 72

8. "கொழுநன் யாரோ ?"

அந்தியொளி பரவுகின்ற நேரந்தன்னில்
அழகிய அம் மனைமுகப்பில் நின்று கொண்டு
முந்திடுமச் சிறுகாலைப் போதில் அத்தை
முத்தழகி மனையினுக்குச் செல்வதாகச்
செந்தமிழால் இனிதாகச் செப்பிவிட்டுச்
சென்றகனி மொழியாளைக் காணுமென்ற
சிந்தைகலக் கத்தோடே நின்றாள் அன்னை
செம்மையிலே கணவர்வரக் கண்டாள் பின்னே. 73

ஒளியப்பர் இல்லத்தில் புகுமுன்னே அவ்
வொண்டொடியாள் தலைப்பாகை கையில் வாங்கி
அளிகின்ற அன்பினளாய், போரில்இன்று
ஆர்பக்கம் வெற்றி யென்று கேட்டவாறே,

முளியன்பு புலப்படுத்தி முறுவல் பூத்தாள்;
முகத்தெங்கும் துளிர்த்தவியர்த் திவலை தள்ளிக்
கிளிச்சொல்லாள் முகம்பார்த்து அன்புஊறக்
கேடில்லை நம்பக்கம் பெரிதாம் என்றார்! 74

கொண்டவர்க்கு நீராட வெந்நீர் வைத்துக்
குளித்தபின்னர் உணவிட்டுக் கூடத்துள்ள
எண்டகுநல் லூசலிலே இருக்கவைத்து
இருங்கள் உடல் மேற்புறத்துக் காயங்கட்கு
உண்டுநல்ல மருந்திடுவேன், என்றேஇட்டு
உவகையிலே மகள்நினைப்பு மாறிநின்று
கண்டுமொழிக் காரிகையாள் புறத்தே கையில்
கமழ்அடைக்கா யேந்திமடித் தளிக்கலானாள். 75

'அன்பே !இன் னோர்வியப்பு மிக்க செய்தி;
அதிர்ச்சிதரத் தக்கதொன்று நிகழ்தல் கேளாய்;
முன்போல் மெய்காப்போர் புறத்தேஆழ
முடிவேந்தர் மதிலேறிப் போரைக்கண்ணால்
வன்பூரக் கண்டுவரும் போதில், கீழே
வன்பகைவர் வசமிருந்து பெரிய வேல்அத்
தென்பூருந் திருமார்பை நோக்கிப் பாயத்
திடுமென்றோர் இளவீரன் பாய்ந்து நின்றே, 76

வேல்தடுத்தான்; அம்மாவக் கணத்தேயந்த
விறல்வீரன் தடுத்திலனேல் வேந்தர்க் கென்னாம்!
பால்மொழிகேள்! அவ்வீரன் இன்னா னென்று
படைவீரர் அறிவதற்குள் மறைந்தான்; நல்ல
நூல்கற்ற பெருவீரன் போலும் அன்னான்;
நூறுயிர ங்கோடிக் கணையில் வல்ல
மேல்நிலையோன் என்றேன்னால் குறித்தல் கூடும்;
மென்பாவாய்! ஈதுனக்கு வியப்பா மன்றோ? 77

(வளரும்)

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேஒன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ரகாசன்மெய்த் தொண்டர்களே.

— குருஞானசம்பந்தர்.

"மனை மாட்சி"

திரு. க. சம்பந்தன்.

(மலர் 20, இதழ் 11, பக்கம் 666 இன் தொடர்ச்சி)

'மனைமாட்சி' என்றால் மேற்கூறிய வனைத்தும் ஒருவனுடைய இல்லக் கிழத்தியினிடம் அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய நல்ல பண்புகளுஞ் செயல்களும் இல்லவள் கண் இல்லை யென்றால், அவர்கள் வாழ்க்கை எத்துணை மாண்பைப் பெற்றிருந்தாலும் பயனில்லை என்ப. இவ்வாறான கருத்துக்களை உள்ளடக்கியே 'சுருங்கக்கூறல்' என்ற வனப்பின்படி நம் வள்ளுவப் பெருந்தகையார்

"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்"

"இல்லதேன் இல்லவள் மாண்பானால் உள்ளதேன்
இல்லவள் மாணாக் கடை"

என்ற இரண்டு குறண்மணிகளை யிசைத்துப் போந்தார். மனைமாட்சியுடையாளரைப்பற்றி நாலடியார் இன்னும் நன்றாக நவில்கின்றது.

"குடநீ ரட்டுண்ணு மிடுக்கண் பொழுதும்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளும் - மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்"

என்ற பாடலை யிவண் இனிதுணர்க.

உலகெலாம் ஈன்றெடுத்த பின்னரும் 'கன்னி' என மறை பேசும் பன்னியாகிய உமாதேவியார் இறைவன் அளித்த இரு நாழி நெற்கொண்டே எல்லா அறங்களையும் புரிந்த மேன்மையினால், அவ் வம்மையாரிடத்தில் மேற்கூறிய மனைமாட்சி நனி மாட்சியோடு இலங்கிற்று" என்று நம் கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாசர் மிக அழகாகக் கூறுகின்றார்.

"நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன்
றருமிரு நாழிநெல்லால்
வினைமாட்சி கொண்டுயி ரெல்லா
மளித்தருண் மேன்மையினுன்
மனைமாட்சி யெய்து முனக்கே
பெருங்கற்பு மாட்சி யன்றிப்
பினைமாட்சி யார்க்குண்(டு) உலகீன்ற
குன்றைப் பெரியம்மையே."

என்பதை யிவண் காண்க.

இன்னணமாகிய நல்ல பண்புகளையுஞ் செயல்களையும் உடைய மனைமாட்சியைப் பெற்ற பெண்டிர்கள் நல்ல மக்கட் பேற்றையும் பெற்றிருப்பார்களேயானுல் அவர்களை மனைவியாகக் கொண்ட கணவன்மார்கள் தவம் வேறே செய்யவேண்டிய அவசியமில்லை என்கின்ருர் குமரகுருபரசுவாமிகள்;

"கற்(பு) உடுத்(து) அன்புமு டித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட் கு - மக்கட்பே(று)
என்பதோ ராக்கமு முண்டாயின், இல்லன் றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு" என்பது அது.

இவ்வாருனநன்னெறியிற் செல்பவர்கள் இல்வாழ்க்கைக்குக் கேடுபயப்பவராவார்கள். அவர்களைப்பற்றியும் ஆன்ருேர்கள் சினங்கொண்டு அறைந்துள்ளனர். அவற்றுள் சிலவற்றைக் காண்க.

"அயலூ ரவன்போக அம்மஞ்ச ளாடி
கயலேர் கண்ணூர வெழுதி—புயலைம்பால்
வண்டோச்சி நின்றுலாம் வாளேர் தடங்கண்ணுள்
தண்டோச்சிப் பின்செல்லுங் கூற்று"

"தலைமகனில் தீர்ந்துறைதல், தான்பிறரில் சேர்தல்
நிலைமையில் தீப்பெண்டீர்ச் சேர்தல்—கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல் விழாக்காண்டல் நோன்பிடுதல்
கோற்ருேடியாள் கோளழியு மாறு" —அறநெறிச்சாரம்.

என்ற இருபாடலையும் இவண் நன்கு நோக்குக. இத்தகைய பண்புகளும், செயல்களும் இல்லாள்கண் இருப்பின், அழிவு பல நேரும். இல்வாழ்க்கை மாண்புருது; இம்மை, மறுமைப்

பயனேயும் எய்த முடியாது. மனே மாட்சி உடைய பெண்டிர் பால் இத்தகைய செயல்கள் எள்ளளவு மிருக்காது. இருக்கவும் கூடாது. கற்புடைய பெண்டிர்கள் தன் கணவன் இல்லில் இல்லாத போழ்து தன்னே யழகுபடுத்திக்கொள்ளமாட்டார்கள். இதைக் கண்ணகி வரலாற்றில் நன்கு நாம் காணலாம். "கண்ணகியின் கணவனுன கோவலன் என்பான் விலேமகளாகிய மாதவியிடத்துத் தான் பிரிந்து சென்ற ஞான்றிலிருந்து கண்ணகி தான் மங்கல அணி ஒன்று தவிர மற்ற அணிகள் யாவும் பூண்டு தன்னே யழகுபடுத்திக்கொள்ளவில்லே" என்று சிலம்பு நன்கு செப்புகின்றது. கற்புடைப் பெண்டிர்கள் தன்னே அழகுபடுத்திக்கோள்வதும், தன் கணவன் தன்னழகைக்கண்டு அனுபவிக்கவேயன்றி, பிறர் அனுபவிக்கஅல்ல. தன் அழகைப் பாதுகாத்துவருவதும் கணவனுக்காகவே யாகுமேன்ப. இதைக் காரைக்காலம்மையாரின் வரலாற்றுல் மிகத் தேள்ளிதின் உணரலாம்.

காரைக்காலம்மையார் 'தன்கணவன் தன்னேத் 'தேய்வம்' என்று கூறி யேற்றுக்கோள்ள மறுத்து அடிபடிந்த ஞான்று, இறைவனிடத்து 'யான் இது நாள் வரையும் என் நாயகனுக்காக அழகைத் தாங்கிய தகைப்போதிந்த எனது ஊனுடலேப் பாதுகாத்துவந்தேன்; என்கணவனே என்னே ஏற்க மறுத்தபோது இவ்வூன்தங்கிய அழகியவுடல் இனி எதற்கு? வேண்டாம் இவ்வூனுடலே நீக்கி எனக்குப் பேயுடலேத்தா" என்று வேண்டிப் பேயுடலேப் பெற்றுரேனின்! அவ்வம்மையாரின் கற்பின்மாண்பைத் தமிழுலகம் எவ்வாறு மறத்தல் இயலும். இக்கருத்தை,

"ஈங்கிவன் குறித்த கோள்கை இதுஇனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்போதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி(வு) அடியே னுக்குப்
பாங்குற வேண்டு மேன்று பரமர்தாள் பரவி நின்றுர்."

— பேரியபுராணம்.

என்ற பாட்டா லறிக.

இன்னணமாகிய கற்புமாட்சியோடு மேற்கண்ட மனே மாட்சியையுங் கோண்டு பெண்கள் வாழ்தல் வேண்டும். இத் தகையோரைப் பேரியோர்களும் வழுத்துவர்.

"உரைசால் பத்தினிக்(கு) உயர்ந்தோர் ஏத்தலும்"

என்பதையுணர்க.

தலைமகனைத் தொழுஉம் வழிபாட்டை யுடையவளாய், வாழ்க்கையைச் செம்மையுற நடாத்திக் கோபமில்லாது தலைமகன் சொல்லியவண்ணம் செய்து, எதிர்மொழி பேசாது பணிவுடைமை கொண்டவளாய் இல்லாள் இருப்பாளேயானல், அவளைத் தலைமகனும் போற்றிப் புகழ்வான் என்ப.

"வழிபா டுடையாளாய் வாழ்க்கை நடாஅய்
முனியாது சொல்லிற்றுச் செய்(து) ஆங்(கு) — எதிருரையா(து)
ஏத்தப் பணியுமேல் இல்லாளை யாண்மகனும்
போற்றிப் புனையும் புரிந்து,"

என்பதைக் காண்க.

இத்தகைய நற்குண நற்செய்கைகளைக் கொண்ட மனை மாட்சியையுடைய பெண்கள், நாடும், நல்லோரும் மதிக்க நன்கு காட்சி தருவார்களே யானல், இல்வாழ்க்கை மங்கலமுடன் இனிது விளங்கும். மனை மாட்சியைப் பெற்றவீடே மங்கலம் பெற்ற வீடாகும். எனவே, நல்லியல்புகள் வாய்ந்த நற்றவப் பெண்டிர்கள் மனைமாட்சியைப் பெற்று வாழ வழிகோலுவாராக! "மங்கல மென்ப மனைமாட்சி" என்ற வள்ளுவன வாக்கை யுணர்ந்து இசை பெருக வாழ்வாராக! வாழ்க பெண்மை! வளர்க இல்லறம்!! ஓங்குக மனைமாட்சி!!!

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

The temple has been kept neat and clean and the staff and members concerned understands thoroughly well their duty etc., service to the humanity. I was very much satisfied with the method and organisation of the temple which is found rarely in temples.

(Sd.) V. Viswanathan,
Works Manager,
Sree Ganeshar Textiles, Davangeru, Mysore State.

இராமகண்டரும் சீகண்டரும்

[கீதை]

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரி

(மலர் 20, இதழ் 11, பக்கம் 662 இன் தொடர்ச்சி)

பாரதத்திலேயே அச்வமேதத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் உதங்கர் என்ற முனிவர் முன்பு அர்ச்சுனனுக்குக் காட்டிய ஸ்வரூபத்தைத் தனக்கும் காண்பிக்கவேண்டும் என்று வேண்டுகிறார். அவ்விடத்திலும் முனிவருடைய வேண்டுகோள்வாக்கியத்திலும், கிருஷ்ணனுடைய விடையிலும், முடிவில் வியாஸ முனிவருடைய வாக்கியத்திலும் ஈச்வர என்ற சொல்லே அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. அங்கு உதங்கர்,

த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் தந்நிதர்சய

(அந்த ஈச்வரனுடையதான ரூபத்தைக் காண விரும்புகிறேன் அதைக் காட்டியருளுக) என்றார்.

ததஸ்ஸ ப்ரீதமநஸா தர்சயாமாஸ தத்வபு:

சந்தோஷித்த மனதுடையராய் அந்த ரூபத்தைக் காண்பித்தார்.

விஸ்மயம்ச யயௌ விப்ரஸ்தத் த்ருஷ்ட்வா பாரமேச்வரம்

(பரமேச்வரனுடையதான அந்த ரூபத்தை அந்தணர் கண்டு வியப்படைந்தார்) என்பன வியாஸ பகவானின் வாக்கு.

புனஸ்த்வாம் ஸ்வேந ரூபேண த்ரஷ்டுமிச்சாமி சாச்வதம்

(உன்னுடைய சொந்த ரூபத்தோடு உன்னைக் காண விரும்புகிறேன்) இது உதங்கருடைய கூற்று. இவற்றாலும் அர்ச்சுனன் கண்டது பரமேச்வரனுடைய ரூபம் என்பது தெளிவாகிறது. பரமேச்வரனே பரமாத்மா என்பது

உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத் யுதாஹ்ருத:
யோ லோகத்ரய மாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர: (15 - 17)

(அழிவற்றவராய் மூவுலகையும் உள்நின்றுதாங்குகிறுர் ஈச்வரன். உத்தம புருஷனுகிய அவரே பரமாத்மா எனப்படுவார்) என்ற வாக்கியத்தால் அறியப்படும்.

ஈச்வரஸ் ஸர்வபூதானும் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா (18 - 61)

ஈச்வரன் சகல பூதங்களுடைய இருதய கமலத்தில் நின்று தன்னுடைய மாயாசக்தியினுல் எல்லா பூதங்களையும் யந்திரத்தில் ஏறியவர்களைப்போல சுழலச்செய்கிறுன் என்று ஈச்வரனை சகல லோக இருதயகமலவாஸியாய்க் கூறுவதும் நோக்கற்பாலது.

உணரத்தக்கனவாய் (திருச்சியமாய்) உள்ள எல்லாப் பிரபஞ்சங்களும் ஈச்வரனுடைய அத்வைதபாவமடைந்த என்னிடம் உள்ளன. ஈச்வரனுடைய விபூதி யோகத்தாலேயே எனக்கு எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாக (ஆதாரமாக) இருக்கும் தன்மை ஏற்பட்டது. அவை யாவும் அறியப்படுவன. நான் அறிபவன். என்னிடமுள்ள இந்த ஈச்வரயோகத்தைப் பார்.

மத்ஸ்தானி ஸர்வபூதானி பச்யமே யோகமைச்வரம் (9 - 5)

என்று ஈச்வரயோகத்தின் பெருமையை உணர்த்துவதும் கவனிக்கத்தக்கது. அந்தஈச்வரனுடைய அருளாலேயே முத்தியென்னும் நிலையான இன்பத்தை அடையமுடியும் என்பதை

தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேன பாரத
தத்ப்ரஸாதாத் பராம்சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்

(தன்னுடைய மாயாசக்தியினுல் எல்லா பூதங்களையும் சுழலச் செய்துகொண்டு யாவருடைய இருதயகமலத்திலும் இருக்கும் அந்த ஈச்வரனையே வாங் மனக் காயங்களால் சரணமடைவாயாக. அவருடைய அருளால் மேலான சாந்தியை (அமைதியை) நிலையான முத்திநிலையை அடைவாய்) என்று கூறுகிறுர். இம்மையிலும் எல்லா நன்மைகளையும் அவரே அளிக்கிறுர் என்பது

தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்

என்பதால் விளங்கும். (என்னிடம் எப்பொழுதும் ஈடுபட்ட பக்தர்களின் யோகக்ஷேமத்தை நான் நிறைவேற்றுகிறேன்).

கீதை சிவபரமாக உள்ளது என்பதை இப்படிப் பல இடங்களிலும் விரித்தெழுதும் ஆசிரியர் சிற்சில மற்ற மதத்தினர் கூறும் விஷயங்களையும் வெளியிடுகிறார்.

சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச: (4 - 13)

என்ற சுலோக பாஷ்யம் குணவிபாகத்தை விரிவாகக் கூறுகிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் ஒன்பது வகையாகவும், இருபத்தேழு வகையாகவும் பிரிக்கப் பட்டுள்ளன. ஸத்வத்தில் ஸத்வம், ஸத்வத்தில் ரஜஸ், ஸத்வத்தில் தமஸ் என்று ஸத்துவகுணம் மூன்றுவகைப்படும். இதே முறையில் ரஜோகுணமும், தமோகுணமும் மும்மூன்றாக ஆகி ஒன்பது வகையாகின்றன. ஸத்வ ஸத்வத்தால் விராட் புருஷனும், ஸத்வ ரஜஸால் தேவரிஷிகளும், ஸத்வ தமஸால் யக்ஷ வித்யாதரர்களும் உண்டாயினர். தமஸ் ஸத்வத்தால் புற்களும், தமோரஜஸால் மரஞ்செடிகளும், தமஸ்தமஸால் மலைகள் முதலியனவும் உண்டாயின. இவ்விதம் இருபத்தேழு குணங்களாலும் உற்பத்திபேதம் கூறுகிறார். இவ்விதம் சொல்லுவது

ரஜஸி ப்ரளயம் கத்வா கர்மயோனிஷு ஜாயதே
ததா ப்ரலீனஸ் தமஸி மூடயோனிஷு ஜாயதே (14 - 15)

ரஜோகுணம் மிகுந்த காலத்தில் மரித்தவன் கர்மங்களில் ஈடுபட்ட பிறவிகளையும், தமோகுணம் மிகுந்த காலத்தில் மரித்தவன் அறிவற்ற பிறவிகளையும் அடைகிறான் என்ற வாக்கியத்திற்குப் பொருத்தமே.

த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராச்ரய:
கர்மண்ய பிப்ரவ்ருத்தோபி நைவகிஞ்சித் கரோதிஸ: (4 - 20)

(பயனில் பற்றைவிட்டு திருப்தியுடையவனாய் கர்மங்களில் ஈடுபட்டாலும் அவன் ஒன்றும் செய்வதில்லை) என்ற சுலோக பாஷ்யத்தில் வேதாந்திகள் கூறும் ஞானபூமி ஏழையும் வர்ணிக்கிறார். ஞானபூமியை அறிந்தவன் மயக்கமாம் சேற்றில் அழுந்தான். சுபேச்சா, விசாரணா, தநுமானஸீ, ஸத்வாபத்தி, அஸம்ஸக்தி, பதார்த்தாபாவனா, தூர்யகா என்பன ஞானபூமிகள். இவற்றுள் முதன்மூன்று ஜாக்கிரத்திலும், நான்காவது ஸ்வப்னத்திலும், ஐந்தாவது சுஷுப்தியிலும், ஆறாவது ஜீவன்முக்திநிலை

துரியத்திலும், ஏழாவது விதேகமுக்திநிலை துரியாதீதத்திலும் எனவும் கூறுகிறார்.

யேமே மதமிதம் நித்யம் அனுதிஷ்டந்தி மானவா: (3 - 31)

என்னுடைய இம்மதத்தைப் பற்றுவோர் முத்தியடைவர் என்ற சுலோக வியாக்யானத்தில் சகலவித தோஷமற்றதாய் சகல மங்களாதாரமாயுள்ளது பிர்மம். அதுவே உலகிற்கு அபின்ன நிமித்த உபாதானம். சூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட பிர்மம் காரணம். ஸ்தூல சிதசித் விசிஷ்ட பிர்மம் காரியம். உலகம் ஈசனுடைய சரீரம். ஸமஸ்த பிரபஞ்சரூபமான பராசக்தியுடன் கூடியவனும் ஒப்பற்றவைபவமுடையவனும் கருணைக்கடலுமான பரமசிவனே பிர்மம். அவனருளால் பக்வான்மாக்களுக்கு மோக்ஷம் கிடைக்கிறது என்று சிவாத்வைதமதத்தைச் சுருக்கமாகக் கூறுகிறார்.

மயி ஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்யாத்யாத்ம சேதஸா (3 - 30)

(ஆத்ம ஸ்வரூபத்தில் ஈடுபட்ட மனத்துடன் என்னிடம் எல்லாக் கர்மங்களையும்விட்டுப் போரிடு) என்ற சுலோக பாஷ்யத்தில் உபாஸனுக்கிரமத்தைக் கூறுகிறார். எல்லையற்ற ஆனந்த ரூபியான சிவத்வப்பேறே முத்தி. பசுத்துவம் நீங்காதவரையில் சிவத்வப்பேறில்லை. நிரந்தர சிவோகம்பாவனையினால் பசுத்துவ நீக்கம் ஆன்மாவுக்கு உண்டாம். பசுத்துவம் நீங்கவே சீவன் சிவமாக ஆகிறான். ஆதலாற்றான் களங்கதோஷமற்ற சகல மங்கள ரூபியான சிவன் ஒருவனே சிவோஹம் பாவனையாக உபாஸிக்கத்தக்கவன். அவ்வுபாஸனையே முத்திக்கு வித்தாகும். இதை பிர்மசூத்திர பாஷ்யத்தில் விரித்துள்ளோம் ஆண்டுணர்க என்று கூறுகிறார். இவ்வாறு மற்றும் சில இடங்களில் பிர்ம சூத்திர பாஷ்யத்தை நினைவிற்குக் கொண்டுவருகிறார்.

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன்
ய: ப்ரயாதி த்யஜன்தேஹம் ஸயாதி பரமாம்கதிம் (8 - 13)

(ஓம் என்னும் பிரணவத்தை உச்சரித்து அதன் பொருளாகிய என்னை நினைத்து உடலை விடுபவன் உயர்கதி அடைவான்) ஓங்காரப்பொருள் பரமசிவன். உமா என்பதும் ஒரு பிரணவமே. பிரணவத்திலுள்ள அகார, உகார, மகாரங்கள் வரிசையாக நின்றால் ஓம் எனவும், அகாரம் இறுதியில் இருந்தால் உமா எனவும் ஆகும். உமா என்ற சொல் பரப்ரகிருதி ரூபமான பராசக்தியை உணர்த்தும்.

உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும்

என்ற உபநிஷத் வாக்கியமும் பராசக்தியுடன் கூடிய பரம சிவனையே உணர்த்தும். சுலோகத்தில் பரமாகதி என்பது முத்தி. அம்முத்தியை அடைந்தவர் முற்றுணர்வுடையராய், எங்குமுள்ளவராய், சகல கிலேசம் நீங்கியவராய், விருப்பப்படி தேகமுடையவராயும், தேகமற்றவராயும் பயங்கரமான ஸம்ஸார மண்டலத்தில் மீளவும் திரும்பாதவராய் சிவத்வமடைந்து நித்யராயிருப்பர் என்று முத்தனுடையநிலையை மிகவும்விரிவாகக் கூறுகிறார்.

இவ்விதம் சிவாத்வைத மதத்தைப்பற்றி எழுந்தது சீகண்ட பாஷ்யம். காஷ்மீர் தேசத்தில் பரவியுள்ளசைவம், தெலுங்கு நாட்டில் பரவியுள்ள சைவம், நம் தமிழ் நாட்டிலேயே தத்துவ ராயர் முதலாயினோர் காட்டும் சைவம், சித்தாந்த சைவம், சிவாத்வைதம் என்று பலபிரிவுகளாகப் பிரிந்து சிற்சில கொள்கை வேறுபாடுகளை உடையதாக இருப்பினும் எல்லாம் சிவபெருமானையே தனிப்பெரும் தலைவனாக, முழுமுதற் கடவுளாக, ஸ்கலப்ரபஞ்சகாரணனாகக் கூறுகின்றன. கீதை சிவபெருமானைப் பற்றியது, சைவத்தை உணர்த்துவது என் பதைக் காட்டவே சீகண்டர், ராமகண்டர், அபிநவர் முதலிய வர்கள் உரையெழுதியுள்ளனர், ஆதலின் அவரவர்களுடைய கொள்கைகளைத் தனிப்பட்ட நூலிலேயே தெளிவாகக் காண முடியும். எல்லா நதிகளிலுமுள்ள நீர் கடைசியில் கடலையே அடைவதுபோல எல்லா மதங்களும் வெவ்வேறு வழியாகச் சென்று ஈசனையே உணர்த்துகின்றன ஆதலின் அவற்றுள் நல்ல வழியே சென்று ஈசனை அடைய முயற்சிப்போமாக.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

பங்கிடச் செய்திடும் பல்கூட்டுச்சேர்வது பத்திற்றலை
தோங்கிடச் செய்திடும் போய்வழக்கிற் சென்று தோற்பதிடர்
தங்கிடச் செய்திடும் வீணெண்ணங்கொள்வது தன்முதலு
மங்கிடச் செய்திடு மண்பறித்துண்பது மான்விழியே. 93

உலக அரங்கில் தமிழ்

வித்துவான், திரு. மு. இராமகிருட்டிணன்

பார் முழுதும் தன்புகழ் பரப்பி, தமிழ் கோலோச்சிய காலமும் உண்டு. தான் வளர்ந்த நாட்டிலே தள்ளி வைக்கப் பட்ட காலமும் உண்டு. காலப்போக்கு இப்பெரும் மாறுபாட்டை விளைவித்தது. அந்நிய மொழியின் ஆதிக்கத்தால் அமுக்கப் பட்ட தமிழ், இதுபொழுது தன் சிறப்பாற்றலால், அவனி யெங்கும் பவனிவரக் காண்கின்றோம். இக்காட்சியை உங்கட்குக் காட்டுவதே என் நோக்கம்.

அமெரிக்கா

வட அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார் டாக்டர் எமனோ (M. B. Emeneau) வடமொழியில் வல்லவராயினும் தமிழிடத்தும் பேரன்புடையவர்; வடமொழி நூல்கள் பல, தமிழிடம் பெற்ற கடன் சொற்களைப் பார் அறியச் செய்தவர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் திராவிட மொழித்துறையை நிறுவி, தமிழ் வளர்க்கப் பெரிதும் முயன்று வருகிறார். தோடர், குறும்பர் மொழிகளான தமிழின் சிதைவு மொழிகளையும் ஆராய்ந்து வருகிறார். தமிழ் நூல்கள் பலவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்று, ஆங்கிலங்கற்ற தமிழ் இளைஞர்களை ஊக்கிவித்து வருகிறார். அமெரிக்கா செல்லும் தமிழறிஞர்களை எல்லாம் ஊக்கி, தமிழ் வளர்க்க முயல்கிறார்.

பிலடேல்பியா நகரில் உள்ளது பேன்சில்வேனியா பல்கலைக் கழகம். இங்கே பல அமெரிக்க மாணவர்கள் தமிழ் கற்கிறார்கள். தமிழ் கற்பிக்கும் தமிழ்பேராசிரியர் ஓர் அமெரிக்கர்; பெயர் திரு லீச் லிஸ்கர் (L. Lisker); தமிழில் நல்ல ஆர்வமுள்ளவர். தமிழ் வினையாக்கம்' குறித்து, ஒரு சிறு வெளியீடும் (Tamil Verb Classification) வெளியிட்டுள்ளார். அந்நிய நாட்டவர் எளிதில் தமிழ் கற்கத்தக்க ஒரு சிறந்த இலக்கண நூலையும் உருவாக்கி வருகிறார். தமிழார்வம் மிக்க இந்த அறிஞரால் அமெரிக்காவில் தமிழ் நல்ல முறையில்

வளர்கிறது. தமிழின் ஒலியியல் குறித்தும் நுட்பமாக ஆராய்ந்து வருகிறார்.

அமெரிக்காவிலுள்ள இந்தியானு பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்க்கவும், ஆய்வு நிகழ்த்தவும் சென்றுள்ளார் திரு அகத்திய லிங்கம். கேரளப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம்பெற, பதிற்றுப்பத்து குறித்து மூன்று ஆண்டுகள் ஆய்வு நிகழ்த்தி, அமெரிக்கா சென்றுள்ள இளைஞர் இவர். பிறவியிலேயே தமிழார்வம்மிக்க இவர், அமெரிக்காவில் சிறந்த முறையில் தமிழ் வளர்ப்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவின் தலைநகரிலிருந்து, "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" என்ற தமிழ் ஒலிபரப்பு, நாள்தோறும் இரவு 8 மணிமுதல் 8-30 மணி முடிய நடப்பதிலிருந்து, தமிழ் அங்கே வளரத் தொடங்கிவிட்டது என்பதை நாம் அறியலாம். அமெரிக்கா முழுதிலுள்ள தமிழர்களை இணைத்து, நியூயார்க் நகரில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவுவதற்கான முயற்சியும் அங்கு நடக்கிறது. தமிழகத்திலிருந்து ஆசிரியர்களாகவும், மாணவர்களாவும் அங்குச்சென்றுள்ளவர்கள் பலராவர். தமிழுக்கு ஆக்கம் காண்பதில் இவர்களும் முனைந்துள்ளனர். சிக்காக்கோ பல்கலைக் கழகத்திலும் தமிழ் இடம் பெறுகிறது.

அயர்லாந்து

தமிழின் சிறப்பை உலகிற்கு உணர்த்தியவர் பலராவர், என்றாலும், அயர்லாந்து, டாக்டர் கால்டுவேல் (Dr. R. Caldweli), அவர்களுள் தலை சிறந்தவர். இவரது ஒப்புயர்வற்ற திராவிட மொழி ஒப்பிலக்கணம் (A Comparative grammer of the Dravidian or South Indian Family of languages) தமிழின் புகழை நாளும் உலகில் ஓதிக்கொண்டிருக்கிறது. இவர் பிறந்த அயர்லாந்து நாட்டிலேயுள்ள டப்ளின் நகரில், தமிழ் வளர முனைவதில் வியப்பில்லை.

இங்கிலாந்து

இங்கிலாந்தில் கால் நூற்றாண்டாகத் தமிழ் வளர்த்த டாக்டர் போப் (G. U. Pope) என்பவரை யாவரும் அறிவர். திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் வடித்தவர் இவரல்லவா? இவர் தமிழின் சிறப்புகுறித்து வரைந்த நூல்கள் பலவாகும். தனிப்பாடல்கள் சிலவற்றையும் ஆங்கிலத்தில்

தந்தார். இங்கிலாந்தில் தமிழ்வளர, இவரே பெருந் தொண்டாற்றியவர் எனலாம்.

பெருமகனுர் எல்லிஸ், ட்ரு (Drew), லாசரஸ் (Lazrus), எச். போப் (W. H. Pope), ஜான் மார்டோக் (John Murdoch) சீவல் (Sewell), தர்ஸ்டன் முதலான பலரும் இங்கிலாந்தில் தமிழ் வளர ஒருவகையான் துணைநின்றவரே.

கேம்பிரிட்ஜ், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகங்கள் தவிர, இலண்டன் பல்கலைக்கழகமும், இதுஞான்று தமிழாராய்ச்சியிலும் தமிழ் வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டுள்ளது. கேப்டன் யதி என்பார் இங்குப் பலகாலம் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி, இதுஞான்றே ஓய்வு பெற்றுள்ளார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சிலகாலம் தமிழ் பயின்ற திரு ஜான் மார் (John Mar) என்னும் ஆங்கிலேயரே, இலண்டனில் தமிழ்ப் பேராசியராகப் பணியாற்றுகிருர். டாக்டர் ஆஷ் என்னும் ஆங்கிலேய அறிஞரும், தமிழ் விரிவுரையாளராக ஆர்வத்துடன் பணியாற்றுகிருர். ஆங்கிலேய மாணவர் பலர், இங்குத் தமிழ் பயில்கின்றனர். இவ்வண்ணம், இங்கிலாந்தின் பலபகுதிகளிலும் ஓரளவு தமிழ் வளர்கிறது.

இலண்டன் தமிழ்ச்சங்கம் திரு இராமச்சந்திரன் அவர்களைச் செயலாளராகக் கொண்டு, தமிழ்ப்பணியாற்றிவருவதைத் தமிழ் உலகு அறியும். கட்டபொம்மன் தமிழ்ப் படத்தைக்கூட, இலண்டனில் திரையிடச் செய்தனர் இச்சங்கத்தார். இலண்டனிலுள்ள பிரிட்டன் வானெலி, தமிழ் நிகழ்ச்சிகளையும் சொற்பொழிவுகளையும் ஒலி பரப்பி வருவதைப் பலரும் அறிவர். இங்கிலாந்தில் படிக்கும் தமிழக மாணவர் பலராவர். இவர் யாவரும், அங்குத் தமிழ் வளர ஓரளவு துணைநிற்கின்றனர். இலண்டனிலுள்ள பிரிட்டன் பெருநூலகம் பலநூறு தமிழ்ச் சுவடிகளைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. திருக்குறளுக்கென தனித்துறையைப் பல்கலைக் கழகத்தில் காணவும், இங்கிலாந்து முயல்கிறது. ஏறக்குறைய நூறுபேர்களுக்கு மேல் இங்கிலாந்தில் தமிழ்வளர, பல வாய்ப்புகளை நிறுவியுள்ளனர்.

பிரான்சு

இங்கிலாந்தைப்போலவே, பிரான்சிலும் தமிழ் வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகள் பண்டுதொட்டே நிகழ்ந்து வருகின்றன.

பாரிசு நகரத்திலுள்ள பெருநூலகத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் பலநூறு உள. தமிழ் நூல்கள் பலவும் உள்ளன.

திருக்குறளைப் பிரேஞ்சு மொழியில் வடித்துத்தந்த அறிஞர்களுள் எம். ஏரியல் (M. Ariel), எம். லேமரேசு போன்றவர்கள் குறிக்கத்தக்கவர்கள்.

பிரேஞ்சு மாணவர் பலருக்குத் தமிழ் கற்பித்து, பிரேஞ்சு நாட்டில் தமிழை வளர்த்த பெருமை, பெரிதும் டாக்டர் வின்சுலோ அவர்களையே சாரும். ஜே. வின்சன் என்பாரும், இந்நாட்டில் தமிழ் வளரத் துணைநின்றவராவர். தமிழைப்பற்றிய நூலையும் (Mannual de la langue Tamoule) இவர் எழுதியுள்ளார். பாரிசு பல்கலைக்கழகம், இன்றும் தமிழ் வளர்ச்சியில் நாட்டம் காட்டுகிறது. பாரிசு நகரிலும் தமிழர் சிலர் வாழ்கின்றனர்.

சுவீடன்

சுவீடன் நாட்டு அறிஞரான பிரைகோலம் (H. Frykholm) என்பவரால், தமிழ் சுவீடன் நாட்டில் அறிமுகமாகி, இப்பொழுது மேலும் பலரால் இங்கு வளர்க்கப்படுகிறது.

ஹாலந்து

ஹாலந்து நாட்டுப் பேரறிஞர் எச். ஜேன்சன் (H. Jensen) என்பவர், தமிழிலுள்ள சிறந்த 3644 பழமொழிகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார். (A Classical Collection of Tamil Proverbs) பிலிப் பிளாடேயஸ் (Philip Baladaens) என்னும் டச்சு அறிஞர் தமிழ் நலனில் ஆர்வமிக்கவர். சுருங்கிய தமிழகராதி ஒன்றையும் இவர் வெளியிட்டுள்ளார். ஹாப்மேன் என்னும் டச்சு அம்மையார், தமிழ் வளர்க்கத் தமிழ் பயின்று வருகிறார்கள். இந்நாட்டிலுள்ள லேய்டன் (Leiden) பல்கலைக் கழகம், தமிழில் ஆர்வம் காட்டி வருகிறது. இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்க்கும் பேராசிரியராக திரு கூய்ப்பர் (F. B. J. Kuiper) என்பார் விளங்குகிறார். தமிழில் பற்றுமிக்க இந்த அறிஞர், தமிழின் நலங்குறித்துப் பல கட்டுரைகள் எழுதிவருகிறார்.

(தொடரும்)

போதியிலும் கயிலையும்

வித்துவான். திரு. அ. க. நவநீதகிருஷ்ணன்.

நாட்டிற்குப் பொருள் வளத்தையும் அருள் வளத்தையும் ஒருங்கே வழங்குவது உயர்ந்த மலையாகும். ஆதலின் ஒரு நாடு நலமும் வளமும் பெறுதற்கு அரிய உறுப்பாக அமைவது 'வாய்ந்த மலை'யென்றார் வள்ளுவர். அத்தகைய மலைக்கு இலக்கணம் வகுத்த பவணந்தியார்,

"அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே."

என்று குறித்தார்.

பவணந்தியார் பகரும் இயல்பெல்லாம் இனிதின் அமைந்த மலைகள். நம் பாரதநாட்டில் இரண்டே உள்ளன. ஒன்று தென் கோடியிலும் மற்றொன்று வடகோடியிலும் அமைந்து எல்லா நலங்களையும் நல்கிவருகின்றன. அவற்றுள் தென்கோடியில் திகழ்வதுதான் பொதியமலை. பாரதநாட்டின் வடவெல்லையாக விளங்கும் இமயத்து உச்சியில் இலங்கும் கொடுமுடியே கயிலைத் திருமலையாகும்.

இவ்விரு பெருமலைகளும் பாரதநாட்டின் பழமையையும் பண்பாட்டையும் விளக்குமாயினும் பொதியமலை தமிழகத்திற்கே உரிய தமிழ்மலையாகும். மேலைத் தொடர்மலையின் தென்பால் அமைந்த இம்மலையில்தான் தமிழ் முனிவனாகிய அகத்தியன் இன்றும் தங்கி இன்றமிழ் வளர்க்கின்றான். அதனாலேயே கவியரசராகிய கம்பநாடர்,

"தென்றமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றுமவன் உறைவிடமாம் ஆதலினால்
அம்மலையை இடத்திட் டேகி"

என்று பாடினார். இன்றும் அத்தமிழ்முனிவன் ஆங்கிருந்து அருந்தமிழ் வளர்க்கும் மாண்பை 'என்றுமவன் உறைவிடமாம்'

என்று குறிப்பிட்டார். இவ்வுண்மையை இவ்விருபதாம் நூற்ருண்டில் இலங்கிய பெருங்கவிஞராகிய பாரதியாரும்,

"முத்தமிழ் மாமுனி நீள்வரையே நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு"

என்று பாடி வலியுறுத்தினர்.

இத்தகைய போதியமலையிலிருந்துதான் தேன்னன் தமிழும் தேன்றற்கோழுந்தும் போருநைத் திருநதியும் பூத்துவருகின்றன. உயிர் நலமளிக்கும் தமிழும் உடல்நலம் பெருக்கும் நறுநீரும் தேன்றலும் தோன்றுதற்கு இடமான போதியமலையின் போற்பினை என்னென்று புகல்வது! போதியத் தேன்றலையும் பூந்தமிழையும் பருகுதற்கென்றே கயிலைநாதனுகிய சிவபிரான் தேன்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவனுயினன் என்ருர் பரஞ்சோதி முனிவர்.

"கடுக்க வின்பெறு கண்டனும் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந்(து) ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவும் அன்ருே!"

சந்தனச்சாரலில் தவழ்ந்துவரும் தேன்றல், பெருமான் திருமுகத்தில் வீசப்பெற்ருல் அவனது ஆடல் இளைப்பு அகலும்; தேன்பாண்டித் தீந்தமிழைத் திருச்சேவியாற் பருகினுல் அவனது களைப்பு நீங்கும்; அதனுலேயே தில்லைக்கூத்தன் தேன்றிசை நோக்கியே உவந்தாடிவந்தான் என்று உரைத்தருளினர் அம்முனிவர்.

போதியமலையின் போற்பினைக் கண்ணுரக்கண்டு களித்த திருவருட் பெருங்கவிஞராகிய குமரகுருபர அடிகளார்,

"திங்கள்முடி சூடுமலை தேன்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு வருள்சுரந்து போழிவதெனப்
போங்கருவி தூங்குமலை போதியமலை என்மலையே"

என்று தேய்வமணம் கமழப் பாடியருளினர். சந்திரமண்டலத்தை அளாவிய அச்சந்தனப் போதியிலின் காட்சி, அடிகளாருக்குப்

பிறை சூடிய பெருமானை நினைவூட்டிவிட்டது. மலையுச்சியி னின்று இழுமென இழிதரும் அருவியின் அழகு. அங்கயற்கண் அம்மையின் அருள் பெருகி வழிவதுபோல் அவருக்குத் தோன் றியது. இத்தகைய போதியமலைச் சிறப்பையெல்லாம் குமர குருபரர், தம் ' மீனாட்சியம்மை குறம் ' என்னும் சிறுநூலில் குறிப்பிடுகிறார்.

உலகில் உள்ள மலைகளுக்கெல்லாம் தனித்தனியே பெயர் உண்டு. அவை பொன்மலை, வெள்ளிமலை, பழனிமலை, கொல்லி மலையென்று அடைகொடுத்தே சொல்லப்பெறும். ஆனால் போதி யில் மட்டும் அடைமொழியின்றி ' அம் ' என்னும் சிறப்பு விகுதி யுடன் ' மலையம் ' என்று புலவர்களால் போற்றப்பெறும் ஏற்ற முடையது. போதியத்தென்றலைப் பற்றிப் புகலவந்த இளங்கோ வடிகள்,

" மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல் "

என்று போற்றினார். இங்கு ' மலையம் ' என்ற பெயரால் போதி யிலைக் குறித்தருளினார். இச்சிறப்பினை முருகதாசராகிய அருட் கவிஞர் விளக்குந்திறம் நமக்கு இன்பூட்டுவதாகும்.

" கலையுணர்வார் பலர்தாமும் தோன்றுதோட்டிந்
நாள்வரையும் கடல்சூழ் பாரில்
நிலைபெறுபொன் மலைவெள்ளி மலையாதி
யனகோடி நிலவக் கண்டும்
புலைவெறுத்துச் சாபமிட்ட புகழ்முனிவன்
வசிப்பிடமாம் போதியை என்னும்
மலையழகு மிகப்பொலிதல் உணர்ந்தன்றோ
'மலையம்'என் வகுக்கின் றாரே. "

வெள்ளிப் பனிமலையின் உச்சியில் சிவபிரான் இலிங்கவடி வாய் எழுந்தருளும் கயிலைமலை, புலவர்களால் ' திருமலை ' என்றே குறிக்கப்பெறும். தெய்வப்புலமைச் சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் புராணமாகிய தம் பெருங்காவியத்தைத் திருமலைச் சிறப்புடன்தான் தொடங்குகின்றார். பனிபடர்ந்த அப்பருமலை திருநீறு புனைந்து திகழ்வதுபோல் உள்ளதாம். யார்க்கும் அறிவரிய பரம்பொருளாகிய சிவன் எழுந்தருளும் சிறப்பால் அது திருமாமலையாய்த் திகழ்கின்றதாம்.

" பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பணி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை "

என்பது சேக்கிழாரின் தெய்வமணக்கும் செய்யுளாகும்.

மேலும் அவ்வாசிரியர், 'மூவுலகும் நான்மறையும் எண்ணிலா மாதவம்செய்து பெற்ற புண்ணியத்தின் திருவுருவம் அப்பெருமலை' என்று பேசினார். உலகமாகிய ஒளிநிலவும் கோடியில் தரையிலுள்ள தலங்கள் எல்லாம் தண்டளிர்களாகக் கயிலைத் திருமலை அவற்றின் நடுவே பூத்த வெண்மலர்போல விளங்குகின்றதாம். இம்மலைக்கண் நான்மறை முழக்கும். விஞ்சையர் கான வீணையும் வான துந்துபியின் ஆர்ப்பும் இடையறாது கேட்டுக்கொண்டே இருக்குமாம். விண்ணவர் விசும்பில் நின்றே அணிந்து வழிபட்ட முடிமாலைகள் ஒருபால் விளங்குகின்றன. அன்னவர் புனைந்து மகிழ்ந்த கற்பகப் பொன்னரி மாலைகள் ஒருபால் பொலிகின்றன. அப்பனி மலையில் பன்னெடுங்காலமாய்த் தங்கித் தவமியற்றும் முனிவர் புனைந்தணிந்த பூமாலைகள் ஒருபால் புதுமணம்செய்கின்றன.

இவ்வாறு தெய்வமணம் பொங்கிக் கமழ்ந்துகொண்டிருக்கும் புனிதத் திருமலையாம் கயிலாயத்தைக் காணுதற்குப் பண்டைநாளில் விழைந்துசென்றார் சிலர். அவருள் ஒருவராகிய அப்பர் பெருமானுக்கு இறைவனே வந்து,

" கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலு மானுடப் பான்மையோர் எய்துதற் கெளிதோ ?
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற்(கு) அரிதால் "

என்று அறிவுறுத்தியருளினார். எம்மை 'ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லாமல், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' என்று கூறிய அப்பெருமானின் உள்ளுறுதியைக் கண்ட கயிலைநாதன், கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் தரிசித்து மகிழுமாறு செய்த மாண்பைப் பெரிய புராணத்தாலும், 'கண்டறியாதன கண்டேன்' என்ற அவரது அருள்வாக்காலும் அறியலாம்.

இனி, காரைக்கால் தந்த கற்பரசியாராகிய புனிதவதியார் பேய் வடிவுகொண்டு தலையால் நடந்து, கயிலை சென்ற வரலாறும், அற்புதத் திருவந்தாதி பாடியருளிய பொற்பும் கற்பவர் உள்ளத்தைக் கரைந்துருகச் செய்வன அன்றோ! மாதவம் செய்த தென்திசை வாழவும் தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரவும் பூதலம் போந்தருளிய ஆலாலசுந்தரர் சேரமான் பெருமாளுடன் கயிலைக்குச் சென்ற சிறப்பைப் பெரியபுராணம் விரித்துரைக்குமன்றோ !

இத்தகைய கயிலையிலிருந்துதான் தமிழ் முனிவனாகிய அகத்தியன் ஒருகால் தென்றிசைக்கு அனுப்பப்பெற்றான். கயிலையில் சிவபிரானுக்கும் உமையம்மையாருக்கும் நடை பெற்ற திருமணத்தைக் கண்டு மகிழ்தற்கு மக்களும், தேவரும் அத்திருமலையில் பெருந்திரளாக வந்து கூடினர். அதனால் வடதலை தாழ்ந்து தென்றலை உயர்ந்தது. அவ்வாறு உயர்ந்த தென்றலையைச் சமன்செய்தற்குக் குறுமுனிவனைச் சிவபிரான் பொதியமலைக்குப் போகுமாறு பணித்தருளினான். அன்றுமுதல் குறுமுனிவன் பொதியிலில் தங்கி நறுந்தமிழை வளர்த்து வருகிறான். கயிலைத் திருமணத்தைக் காணத் தென்னாட்டவர் தாம் திரண்டு சென்றிருக்கவேண்டும். அதனாலேயே அன்று தொட்டுப் பத்தியால் தென்தலை உயர்ந்தது என்று கண்ட இறைவன் ‘ தென்னாடுடைய சிவனாய்த் ’ திகழ்ந்துவருகின்றான்.

தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் ‘ நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் ’ என்று கட்டுரைத்தார். ‘ உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் ’ என்பது சித்தாந்தம். ‘ மேரு மலையைச் சேர்ந்த காகமும் பொன்னிறம் பெறும் ’ என்பது பழமொழி.

“ ....பனிமால் இமயப்
பொருப்பகம் சேர்ந்தபோல் லாக்கருங்
காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென்(று) இவ்வா றுரைக்குமன் ”

இவ்வாறு பொதியிலும் கயிலையும் பாரதநாட்டின் பண்பு வரம் பாக - நின்று ஒளி பெருக்கிவருகின்றன. வாழிய கயிலை ! வாழிய பொதியில் !!

சிவசயிலப் பள்ளு

இராமநாதன் கவிராயர் இயற்றியது

பதிப்பாசிரியர் :- பைந்தமிழ்ச்செம்மல்,
வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்

காப்பு

விநாயகர்

தெள்ளுதமிழ் அன்பூர்ச் சிவசயில நாயகர்மேல்
பள்ளிசையை நன்ருகப் பாடுதற்குஎன் — உள்ளம்வினைக்
கையானனத் தனையான் காண்பரியோன் தேற்றதுதிக்
கையா னனத்தனையான் காப்பு.

கடவுள் வணக்கம்

திருமால்

நீர்தாங்கு செஞ்சடையினர் விடையினர்
நிறைந்துஉயர் பரம்பொருளினர் அருளினர்
நீறுஇலங்கிய மேனியர் ஞானியர்
—நேசத்து உறைவோர்

ஏர்தாங்கத் தாரினர் சீரினர்
இடையன் வெட்டிய சிரசினரர் பரசினர்
என்று உளத்தினில் இருப்பவர் சிவசயி
—லேசர் பள்ளிசைக்கே

கார்தாங்கு மெய்த்திடத்தினர் வடத்தினர்
கமலம் என்றுஅலர் நாபியர் கோபியர்
கலைசிலை பறித்தவர் முறித்தவர் மத
—கரிக்குஇடர் தவிர்த்தோர்

பார்தாங்குஅர வணையினர் துணையினர்
பரதர் முன்வரு பெரியவர் அரியவர்
பங்கயமயில் கொங்கையின் மருவிய
—செங்கையர் துணையே.

நாமகள்

சேங்கையின்மழுப் பதித்தவர் கதித்தவர்
சிந்துரத்துஉரி உரித்தவர் தரித்தவர்
திரைகடலேத்தேன் கரையினர் வரையினர்
—செம்மேனியஞர்

எங்களுக்கு அருள் தேரிபவர் புரிபவர்
இமைய மங்கை கைப் பிடித்தவர் நடித்தவர்
எழில் அழகப்பன் பணிபவர் சிவசயி
—லேசர் பள்ளிசைக்கே

வேங்கலி எனேப் பிடித்ததை அடித்ததை
விடுத்தவன் தடுத் தவன் நன்மை கோடுத்வன்
விதி நாவினில் உறைந்தவள் நிறைந்தவள்
—வில்வாள் நுதலாள்

பங்கயத்தலர் வீட்டினள் பாட்டினள்
பணேத் தேழும்துணேத் தனத்தினள் கனத்தினள்
பாரதிபதி என்ன இருத்தும் என்
—பாரதி துணேயே.

சுப்பிரமணியர்

தலேயில் வைத்தவேண் மதியினர் கதியினர்
தவமுடித்தவர் இதயத்தில் வைத்தவர்
தனிமேருவை வளேத்தவர் முளேத்தவர்
—தலேமாலே யிஞர்

பலிஎடுத்த கபாலத்தர் சூலத்தர்
பார் வேந்தனும் சங்கர நாரணன்
பரவியசிவசயிலேசர்க்கு இசை
—பள்ளே சலிலே

மேலிவுறு சோற்கள் வருகினும் கருகினும்
மேளத்துஎழு தாளச் சுருதிகள்
விலகினும் தமிழ்ப் புலவர் தள்ளார், சற்றும்
—விள்ளார் குறையே

வலபையைப் புணர்அறுமுகன் துணேஎன
வருகுகன்அறு முகனும்என் நாவுடை
மங்கையும் கன மங்கள சோற்களே
—வருவிப்பவரே.

நூல்

பள்ளியர் வரவு

கலிப்பா

சித்தசனை வென்றோர் சிவசயில நாயகனார்
முத்தமிழ் நன்னாட்டின் முறைவளம் எலாம் உரைக்க
மைத்தடவு நெற்றி மஞ்சணைப் பொட்டும் சிறக்கப்
பத்தியுடனே இரண்டு பள்ளியர்கள் வந்தாரே. 1

அன்பூர் மூத்த பள்ளி வரவு

சிந்து

கூட்டு மஞ்சணைப் பூச்சும் கபோலமும்
குழைத்த சந்தனம் அதில் வரிக்கோலமும்
குல்லைமென் முலைக்குடமும் நீலக்
கல்ஒளி வடமும்

சூட்டு கொண்டையின் மேற் பிச்சி மாலையும்
துவள்இடையின் பட்டுஆங்கு உடைச் சேலையும்
சுருவத்துக்கு இணங்கிய குறுஞ் சிரிப்பும்
புருவத்தின் நெரிப்பும்

வேட்டு மதுக் குடித்துஅசை நெளிப்பும்
வேடிப்பாகக் கோச்சியின் மஞ்சள் குளிப்பும்
வீசு செங்கையில் நிறைந்த பொற்காப்பும்
மிஞ்சு இறு மாப்பும்

பூட்டிய தங்கத் தாலிக் கந்தரமும்
பொலிந்து ஓங்கு சுந்தரமும் அதாகப்
புகழ்அன்பூர் மூத்த பள்ளி
தோன்றி னாளே 2

அத்தாளநல்லூர் இளையபள்ளி வரவு

குங்கும களபம்கமழ் கொங்கையும்
இங்கித வசனம் பகர் சங்கையும்
குழைத்திடு திருநாமமும் கலைப்பணி
இழைத்துகில் உடையும்

பங்கய வாள் முகத்தினி லிருக்கும்
செங்கனிவாய் முறுக்கும் கதுப்புக்குள்
பாக்கு ஒதுக்கிய புடைப்பும் விரல்கோடு
வேர்த்ததைத் துடைப்பும்

இறைவனுள்ளத்து உயிரோவியம்

பிர்மஸ்ரீ. வ. குகசர்மா.

இறைவனின் குணம் அருள். அருள் தாயின் வடிவம். இறைவன் தனது உள்ளத்திலே உள்ள அருளை ஏனைய உயிர்கள் தெளிவாக அறிந்துகொள்வதற்காக ஒரு உருவத்தைக் கொடுத்தார். அதுவே உலக மாதாவாகிய உமையம்மையாரின் திருவுருவம் "மேனுளகிலம்தர மெல்லியலாய் ஆனுதருள்தன்னை யளித்தொருபால் தானுக விருத்திய தற்பரன்" என்பது கந்த புராணம். இறைவன், தான் அமர்ந்துள்ள ஆலயங்களிலெல்லாம் அருளாகிய உமையம்மையாருடனே அமர்ந்துள்ளார் 'அமையாத்தண்ணளி உமையுடன் நிறைந்த, ஆலவாயுறைதரும் மூலக் கொழும்சுடர்" என்பது கல்லாடம்.

இறைசத்தியின் பெருமையை எம்போன்றோரால் உண முடியாது. "அருள் என்னும் தாயினுல்தான் சிவம் என்னும் தந்தையைக் காணமுடியும்" என்பர் ஆன்றோர். சத்திபாசத்தை நீக்கவல்லது "அவர்கள் சிவசத்தியைத் தரிசித்து அவராற் பாசமனைத்தும் நீங்கப்பெற்று சர்வகாரணரும் உமாசகாயருமாகிய மகாதேவரை ஞானத்திறைல் கண்டனர்" என்னும் வாயு சங்கிதை வாக்கியத்திறைல் இவ்வுண்மை நன்கு புலப்படும். ஆணவம் நம்மைப் பீடிததிருக்கும் மும்மலங்களிலும் மிகவும் கொடியது. மற்றைய இருமலங்களிலும் பார்க்க ஆழமாக உயிருடன் ஒட்டியது. முத்திநிலையிலல்லாமல் அகலாத வலிமை உடையது. தனது உருவத்தை வெளிக்குக் காட்டாது. கிழங்கின் தன்மையும் இவ்வாறுனதே. கிழங்கு நிலத்துள் இருப்பது பிறர் கண்களுக்குத் தெரியாது. அகழ்ந்தெடுப்பதும் கடினம். இதனுலே ஆணவத்தைக் கிழங்கிற்கு ஒப்பிடுவர் குமரகுருபரர். அகந்தையாகிய அந்தக் கிழங்கை அகழ்ந்தெடுத்தால் அவர்களின் நெஞ்சில் அருள் குடிகொள்ளும். அங்கே அருளொளியாகிய ப்யிர் வளரும். சிவபோகம் கிட்டும். இதனை, "........ அருடோய நீர்ப்பாய்ச்சல் செய்து நாற்றைப் பதித்ததென ஞான மாம் பயிரதனை நாட்டிப் புவிப்பட்டியு, நமனுன தீப்பூடு மனு

செங்கையில் நிறை அங்குலித் துடியும்
சீவிய குழல் பூவில் முடியும்
தேட்டிய விழிக் கடையும் நடைக்கு
எட்டிய நடையும்

அங்கையில் ஒரு சங்கும் திகிரியும்
அமைந்தவர் பதம் துதித்து இவை உடனே
அத்தாள நல்லூர்ப் பள்ளி இளையவள்
தோன்றினளே. 3

பள்ளன் வரவு

கலிப்பா

கள்ளிதழித் தாமன்பூர்க் கத்தர் சயிலேசர் பண்ணைப்
புள்ளிஅடி மைக்குள்மிஞ்சு போர்புரிகட் பார்வையுமாய்த்
தள்ளி அசைந்தசைந்து தள்ளாடி ஆள்திரண்டு
பள்ளியர்கள் வந்தபின்பு பள்ளன் வந்துதோன்றினனே. 4

பள்ளன் பெருமை

சிந்து

சட்டமாகத் தோட்ட
பட்டைச் சல்லடத்திற் கட்டுப்
பட்டுத் தாளின் முட்டத் தொங்க
விட்ட சம்பிரமும்

வேட்டுக் கோட்டினுல் மிகக்காய்ந்து
இட்ட கைத் தடியும் எலு
மிச்சம் பழம் வைத்திட மேல்
வீசையும் முறுக்கும்

குட்ட வயிற்றுக்குள்
முட்டக் குடித்தமது எடுத்துக்
கோட்டக் குமட்டி ஏப்பம்
இட்டே வரும் இழுப்பும்

கட்டிய கச்சையுமாய்க் கை
தட்டிய முறை ஆடிக் கொண்டு
கடும் போர்க்கு எதிர் சயிலக்
குடும்பன் வந்தான். 5

(தொடரும்)

இறைவனுள்ளத்து உயிரோவியம்

பிர்மஸ்ரீ. வ. குகசர்மா.

இறைவனின் குணம் அருள். அருள் தாயின் வடிவம். இறைவன் தனது உள்ளத்திலே உள்ள அருளை ஏனைய உயிர்கள் தெளிவாக அறிந்துகொள்வதற்காக ஒரு உருவத்தைக் கொடுத்தார். அதுவே உலக மாதாவாகிய உமையம்மையாரின் திருவுருவம் "மேனுளகிலம்தர மெல்லியலாய் ஆனுதருள்தன்னையளித்தொருபால் தானுக விருத்திய தற்பரன்" என்பது கந்தபுராணம். இறைவன், தான் அமர்ந்துள்ள ஆலயங்களிலெல்லாம் அருளாகிய உமையம்மையாருடனே அமர்ந்துள்ளார் ' அமையாத்தண்ணளி உமையுடன் நிறைந்த, ஆலவாயுறைதரும் மூலக்கொழும்சுடர்" என்பது கல்லாடம்.

இறைசத்தியின் பெருமையை எம்போன்ருரால் உணர முடியாது. "அருள் என்னும் தாயினுல்தான் சிவம் என்னும் தந்தையைக் காணமுடியும்" என்பர் ஆன்ருேர். சத்திபாசத்தை நீக்கவல்லது '' அவர்கள் சிவசத்தியைத் தரிசித்து அவராற் பாசமனைத்தும் நீங்கப்பெற்று சர்வகாரணரும் உமாசகாயருமாகிய மகாதேவரை ஞானத்தினுல் கண்டனர்" என்னும் வாயு சங்கிதை வாக்கியத்தினுல் இவ்வுண்மை நன்கு புலப்படும். ஆணவம் நம்மைப் பீடிததிருக்கும் மும்மலங்களிலும் மிகவும் கொடியது. மற்றைய இருமலங்களிலும் பார்க்க ஆழமாக உயிருடன் ஒட்டியது. முத்திநிலையிலல்லாமல் அகலாத வலிமை உடையது. தனது உருவத்தை வெளிக்குக் காட்டாது. கிழங்கின் தன்மையும் இவ்வாருனதே. கிழங்கு நிலத்துள் இருப்பது பிறர் கண்களுக்குத் தெரியாது. அகழ்ந்தெடுப்பதும் கடினம். இதனுலே ஆணவத்தைக் கிழங்கிற்கு ஒப்பிடுவர் குமரகுருபரர். அகந்தையாகிய அந்தக் கிழங்கை அகழ்ந்தெடுத்தால் அவர்களின் நெஞ்சில் அருள் குடிகொள்ளும். அங்கே அருளொளியாகிய ப்பயிர் வளரும். சிவபோகம் கிட்டும். இதனை, "...... அருடோய நீர்ப்பாய்ச்சல் செய்து நாற்றைப் பதித்ததேன ஞானமாம் பயிரதனை நாட்டிப் புவிப்பட்டியு, நமனுன தீப்பூடு மனு

காமன் முன்னின்று நாடுசிவ போகமான, பேற்றைப் பகுத்தருளி யேனையாள வல்லேயோ" எனத் தாயுமானவரும் எடுத்துக் கூறுகிருர். சிவபெருமான் அருளிற் பிரியாதவர். "நந்தம்மை யாளுடையான் தன்னிற் பிரிவிலா வேன்கோன்" என்பது திருவெம்பாவை. "சத்தியாரோடு கூடிய சிவபெருமானை எவர் தியானிக்கின்றனரோ அவர் அமிர்தத்தைப் புசிக்கின்றனர்" என்பது வேதவாக்கியம். அகந்தையாம் கிழங்கை அகழ்ந் தெடுப்பதற்குத் துணையாய்நிற்பது அருள். பின்பு அகந்தைக் கிழங்கை அகழ்ந்தவர்களின் உள்ளத்தில் ஒளியாய் நிற்பதும் அருள்தான். எனவே "அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பருளக் கோயிற்கேற்றும் விளக்கே" எனக் குமர குருபரர் போற்றுகிருர்.

மலை உற்பத்தியின் இடம். மலைவளம் சிறந்த நாட்டில் முகில்கள் படிந்து உயிர்கள் தழைத்தற்குக் கருவியாகிய மழை யைப் பெய்கிறது. அந்த மழைநீர் வறண்ட நிலங்களிலும் ஆருகப் பாய்ந்து அதைச் செழிப்புள்ள நிலம் ஆக்கிவிடுகிறது. பலகாலம் மழையில்லாமல் வறட்சியடைந்தாலும் வளம் தரும் தன்மை மலையினுடையது. தம்மை நினையாத வறண்டதன்மை யுள்ள உயிர்களிடத்தும் தம் அருளை உண்டாகச்செய்யும் உமை யம்மையாரின் பிறப்பிடமாக மலை கூறப்படுவது பொருத்த முடையதே. மலையிலிருந்துபாயும் ஆற்றின்போக்கை உமைக்கு உவமை கூறுவர் பரஞ்சோதி முனிவர். சிவசக்தி ஒன்றே பல வேறு காரணங்கட்காக மகேசுவரி சரசுவதி, மனோன்மணி, இலக்குமி எனப் பலபெயரைப் பேற்றிருத்தல்போல ஆறு, கால், குளம், கிணறு எனப் பல பெயர்களைத் தாங்கி சமுத்திர நீர் ஒன்றே உலகத்திலே உள்ள தாவரங்களை வளர்க்கிறது என்ற கருத்தைப் பரஞ்சோதி முனிவர்,

"ஈறிலாதவ ளொருத்தியே யைந்தொழி லியற்ற
வேறுவேறுபேர் பெற்றென வேலைநீ ரொன்றே
ஆறு கால் குளம் கூவல்குண் டகழ்கிடங் கெனப்பேர்
மாறியீறில்வான் பயிரெலாம் வளர்ப்பது மாதோ"

என்ற செய்யுளால் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்க வைக்கிருர். அகப்பொருள் நூலாரும் மலையும் மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்திற்குப் புணர்தலும் புணர் தனிமித்தமும் என்று கூறிப்போயினர். அசையாத கொள்கை

யுடையவரை மலைக்கு நிகராகக் கூறுவர். இமயமலை உல கத்தில் சிறந்த மலை. இரும்பனியுருத இமையமால்வரை அரும்பவிழாத வெண் கமலத்திற்கும் சிவபெருமானுக்கும் உவமையாகக் கந்த புராணத்தில் கூறப்பெற்றுள்ளது. எனவே இமயமலையில் அம்மையார் விளையாடுவதாகக் கூறப்படுவது இறைவன் உள்ளத்திலும் அடியார்உள்ளக்கமலங்களிலும் அருள் விளையாடுதலையே குறிக்கும் யானையின் முகம் பிரணவருபம் பிடியானை உமையம்மையாரைக்குறிக்கும். இக் கருத்துக்களை அமைத்தே "வளர் சிமய இமயப் பொருப்பில் விளையாடுமிள மென்பிடியே" என்றார் குமரகுருபரர்.

வேதங்கள் மிகப் பழமையானவை அங்கே அறம் முதலிய புருடார்த்தங்களும் அவற்றைப் பற்றிய விரிவுகளும் பல தோத்திரப் பாடல்களும் அடங்கியுள்ளன. வேதங்களிலே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு அறங்களையும் உயிர்கள் உய்யும் பொருட்டு உமையம்மையாரே காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருந்து வளர்த்தார் என்பது வரலாறு. கற்றதின் பயன் அறத்தை வளர்த்து இறைவனை அடைதலே என்னும் பயனை நன்கு காட்டுதலினாலே "தொடுக்கும் பழம் பாடற் றொடையின் பயனே" என் அழைக்கப்பட்டார்.

அழகிய இன்பமூட்டும் காட்சிகளிலே இறைவனைக் காண்பர். மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றிலும் ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரிலும் இறைவனைக் கண்டார் இராமலிங்க சுவாமிகள். தமிழ் ஓசையிலும் தமிழ் நாட்டுக்காட்சி களிலும் மனதைப் பறிகொடுத்தார்கள் தமிழர்கள் "செந் தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுதுகாதினிலே" என்றார் பாரதியார். இன்பத் தமிழ் மலர்களினாலே இனிய மாலை களைச் செய்து அணிவித்த அடியார்க்காகத் தூது சென்றார். முதலை உண்டபாலனை அழைத்தார்; அருள் வாசகமாம் திரு வாசகத்தைத் தமது கைப்பட எழுதினார். தமிழ் என்பது சுவை யுடையது. இன்பமுடையது. அந்தச் சுவை தமிழுக்கு உரிய பல இலக்கண அமைதிகளையுடையது; பல துறைகளையுடையது. இவ்வாறான அமைதியே சுவையைக்கொடுப்பது. அந்தச் சுவை அருளைத் தேடித்தரவல்லது. எனவே குமரகுருபரர் "துறைதீந் தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என அழைத்தார்.

அருள் மற்றையோரைத் தம்மிடத்தே கவரும் தன்மை யுடையது. சிவானந்த போகம் உண்ணப் பெருகியிருக்கிறது. அதை உண்ண ஓடி வாருங்கள் என அழைக்கிருர் தாயுமானவர். மலர் தம்கவற்சியால் வண்டைத் தேனுண்ன அழைக்கிறன்து. அருளும் தம் கவற்சியால் உயிர்களை அழைக்கிறது. சிறிய பூவில் தேனுண்ணவேண்டாம், காண்பதால்மாத்திரமல்ல நினைப் பதாலும் ஆனந்த மாகிய தேனைச்சொரியும் இறைவனிடம் போகும்படியாக வண்டு ஒன்றைப் பார்த்து மணிவாசகர் கூறுகிருர். அருளின் கவர்ச்சியைக் காட்ட இறைவியின் குழற் காடு வர்ணிக்கப் படுகிறது. தேவர்களின் மலர்களில் வண்டுகள் மொய்யாது என்பது ஒரு வழக்கு. ஆனுல் இங்கே வண்டுகள் மோய்ப்பது எனக் கூறப்படுவது அடியார்களாகிய வண்டுகளே யாகும். எனவே " மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடேந்து மிளவஞ்சிக் கோடியே " என்ருர்.

உலகமேல்லாம் கடந்து நின்றவன் இறைவன். அவனுள்ளம் அருள் நிரம்பியது. அந்த அருள் எவ்வாருன தன்மையுடையன என்ற உண்மை மேற்குறித்த கருத்துக்களடங்கிய மீனுட்சி பிள்ளைத்தமிழில் குமரகுருபரர் தாம் பாடிய ஒரு சிறந்த பாட்டால் எடுத்துக்காட்டியுள்ளார். அப்பாடல் பின்வருவது :-

" தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைதீந் தமிழி னொழுகு நறும்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்து நின்ற
வொருவன் றிருவுள்ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோவியமே மதுகரம வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே "

கம்பரும் காளிதாசரும்

சிரோமணி, வித்துவான். திரு. R. V. நடராஜன்.

எல்லாமக்களுக்கும் எக்காலத்தும் பயன்படக்கூடிய அரும் பெரும் கருத்துக்களை, ரசித்து இன்புறக்கூடிய வகையில் யார் எந்தமொழியில் சொன்னாலும் அவர் மகாகவி எனப் போற்றப் படுபவர் ஆவர். அத்தகைய கருத்துக்களைக் கூறுவதென்பது, இறைவனுடைய திருவருள் பெற்ற தெய்வீகக் கவிஞர்களால் தான் இயலுமேயன்றி வேறு யாராலும் இயலாது.

இத்தகைய அருட்கவிஞர் வரிசையில் வருபவர்கள்தான் இத்தலைப்பில் குறிக்கப்பட்ட மாபெருங்கவிகளான கம்பரும் காளிதாசரும் ஆவார்கள். தமிழ்மொழியில் கம்பரைப்போல வடமொழியில் பிரசித்திபெற்ற கவிஞர் காளிதாசராவர்.

மாபெருங்கவிஞர்களான இவ்விருவரும் தத்தம் கருத்துக் களை வெவ்வேறு மொழிகள் வாயிலாகக் கூறியிருந்தாலும், அக் கருத்துக்கள் ஒத்திருக்கும் சில பகுதிகளை ஆராய்வதே இக்கட் டுரையின் நோக்கமாகும். கம்பர், தான் இயற்றிய இராமாயணத் தில் கடவுள் வாழ்த்துக் கூறுமிடத்து " உலகம் யாவையும் படைத்து, காத்து, அழித்து அலகிலாத் திருவிளையாடல் புரியும் தலைவரைச் சரணமடைகிறோம் " என்ற கருத்தமைந்த

" உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே "

என்னும் இச்செய்யுள் மூலமாக சைவ வைணவ அபேதத்தைப் புலப்படுத்துகிறார்.

இனி, இக்கருத்தோடு இயைபுடைய காளிதாசரது வாக்கை யும் நோக்குவோம். காளிதாசர், " குமாரசம்பவம் " என்னும் நூலில் ஓரிடத்து, " வடிவம் ஒன்றுதான். அதுதான் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்று மூன்றாகப் பிரிந்தது. அவரவரது

தொழில்களைச் செய்யுங்கால் அவரவருக்குப் பெருமை ஏற்படு கிறது '' என்ற கருத்தை,

> एकैव मूर्तिः बिभिदे त्रिधा सा सामान्यमेषां प्रथमावरत्वम्।
> विष्णोर्हरः तस्य हरिः कदाचित् वेधास्तयोः तावपि धातुराद्यौ ॥

என்னும் இச்சுலோகத்தின் வாயிலாகத் தெரிவித்துத் தனது சைவ வைணவ அபேதத்தைப் புலப்படுத்துகிறார். '' கம்பன் சமரச வைணவன் ; காளிதாசன் சமரசச் சைவன் '' என்பதாக சுத்தானந்த பாரதியார் அவர்கள் '' மகாகவி காளிதாசன் '' என்னும் நூலில் கூறியிருக்கும் கருத்தை மேலே குறித்த பாசுரங்கள் தெளிவுறுத்துவன.

இனி, கம்பர் அவையடக்கம் கூறுமிடத்து, '' குற்றமற்ற வெற்றியையுடைய இராமபிரானது கதையைக் கூறுவதற்குத் திறமை இல்லாதிருந்தும், ஆசையின் காரணமாகக் கூறத் தொடங்கும் இச்செயல், ஒரு பூனையானது சிறந்த திருப்பாற் கடலை அடைந்து அக்கடலிலுள்ள பால் முழுவதையும் பருகு வதற்கு ஆசைகொண்டு புகுந்ததை ஒக்கும் '' என்ற கருத்தை,

> '' ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
> பூசை முற்றவு நக்குபு புக்கென
> ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
> காசில் கொற்றத் திராமன் கதையரோ ''

என்ற பாசுரத்தில் பகர்ந்துள்ளார்.

காளிதாசர், '' இரகுவம்சம் '' என்னும் நூலில் அவை யடக்கம் கூறுமிடத்து. '' இச்சூரியவம்சம் எங்கே ? எனது சிற்றறிவு எங்கே ? சூரியகுல மன்னர்களின் வரலாற்றை எழுத முயன்ற செயல், கடக்கமுடியாத கடலை ஒருத் தெப்பக்கட்டை யால் எளிதில் கடந்துவிடலாம் என்று அறியாமையால் நினைப்ப வனது செய்கையை ஒத்திருக்கிறது '' என்ற கருத்தை,

> क्व सूर्यप्रभवो वंशः क्व चाल्पविषया मतिः।
> तितीर्षुर्दुस्तरं मोहादुडुपेनास्मि सागरम् ॥

என்ற சுலோகத்தில் கூறியுள்ளார். இவர்களது உவமையில் சிறிது வேறுபாடிருப்பினும் கருத்து ஒன்றியிருப்பது ஊர்ந்து நோக்கத்தக்கது.

இனி, தாடகை இராமனது அம்பால் அடிபட்டுக் கீழே வீழ்ந்த செய்தியைக் கூறும்போது "புழுதியுடைய காடு முழுவதும் குருதிநீர் மிகும்படி, பல பிராணிகளின் தசையையுடைய பற்களையும் திறந்த வாயையும் கொண்ட தாடகை வீழ்ந்தது, பத்துத் தலைகளிலும் கிரீடத்தையுடைய அரக்கர் தலைவனான இராவணனுக்கு முன்கூட்டியே அவனது அழிவைப் புலப்படுத்துவதற்காக பூமியிலே அறுந்து வீழ்ந்த அவனது அழகிய வெற்றிக் கொடியைப்போன்றிருந்தது" என்பதைக் கம்பர்,

"பொடி உடைக் கானம் எங்கும்
குருதி நீர் பொங்க வீழ்ந்த
தடி உடை எயிற்றுப் பேழ்வாய்த்
தாடகை தலைகள் தோறும்
முடி உடை அரக்கற்கு அந்நாள்
முந்தி உற்பாதம் ஆகப்
படி இடை அற்று வீழ்ந்த
வெற்றி அம் பதாகை ஒத்தாள்"

என்ற இச்செய்யுளில் கூறியிருக்கும் கருத்தும், தாடகை அடிபட்டுக் கீழே விழுந்த செய்தியைக் கூறவந்த காளிதாசர், "அம்பால் அடிபட்டுக் கீழே விழுந்த தாடகை, தான் வீழ்ந்த காட்டுப்பிரதேசத்தைமட்டும் அசையும்படிச் செய்யவில்லை. பின் இராவணனது பெருமைமிக்க இராஜ்யலக்ஷ்மியையும் அசையும்படிச் செய்துவிட்டாள்" என்பதாக,

बाणभिन्नहृदया निपेतुषी सा स्वकाननभुवं न केवलाम् ।
विष्टपत्रयपराजयस्थिरां रावणश्रियमपि न व्यकम्पयत् ॥

என்ற இச்சுலோகத்தின் வாயிலாகக் கூறும் கருத்தும் ஒத்திருப்பது நோக்கத்தக்கது.

இனி, மிதிலாநகரத்தில் இராமன் தனிமையாகப் படுத்திருக்கும்போது, தான் காதல்கொண்ட சீதையைப்பற்றிநினைக்கையில், "நான் காலையில் பார்த்தபெண் கன்னிப்பெண்ணா? அல்லது மணமானபெண்ணா? மணமான பெண்ணாயிருந்தால் மனத்தாலும் நினைப்பது தவறல்லவா?" என்பதாகக் கலங்கி முடிவில், "அப்பெண் கன்னிப்பெண்தான்; ஏனெனில், தகுதியுள்ளதையே சிந்திக்கக்கூடிய எனது மனம் அவளை நாடுவதால் அவள் மணமாகாத பெண்தான்; தகுதியற்றதை என் மனம் நாடாது.

எனவே இதில் ஐயமில்லை '' என்பதாக முடிவுகட்டுகிருன். இக்கருத்தை,

'' ஏகு நல்வழி யல்வழி யென்மன
மாகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
யாகும் வேறிதற் கையுற வில்லையே. ''

இச் செய்யுளில் கம்பர் புலப்படுத்துகிருர். இனிக் காளிதாசர் '' சாகுந்தலம் '' என்னும் நாடகத்தில் இக்கருத்தைத் தெரிவிக்கும் இடத்தைக் காண்போம்.

துஷ்யந்தன் ஆசிரமத்தில் சகுந்தலையைக் கண்டு அவளது அழகில் ஈடுபட்டு அவளை மணக்க விரும்புகிருன். அப்பொழுது அவன் '' இவள் ஆசிரமத்தில் இருப்பதால் முனிவரின் மகளாயிருக்கக் கூடுமா? அல்லது க்ஷத்திரியனுகிய நான் மணப்பதற்குத் தகுதி உடையவளாக இருக்கக் கூடுமா ''? என ஐயுற்று, '' க்ஷத்திரியன் மணம் புரிந்துகொள்ளத் தகுதியுடைவள்தான் இவள். ஏனெனில் நேர்மையையே சிந்திக்கின்ற என் மனம் இவளை விரும்புகிறது '' என முடிவுகட்டுகிருன். இக்கருத்தை

असंशयं क्षत्रपरिग्रहक्षमा यदार्यमस्यां अभिलाषि मे मनः

என்ற சுலோகத்தில் காளிதாசர் புலப்படுத்துகிருர். இக்கருத்து இயைந்திருப்பதை நோக்குங்கள்.

இனி, மிதிலையில் ஜனகர் இராமனது அழகைப் பருகி, ''இவ்வழகனுக்குச் சீதையை மணம்புரிந்து வைத்துவிடலாமே'' என்று எண்ணிஞர். ஆனல், '' வில்லை வளைப்பவனுக்குத் தானே சீதை உரியவள். இவனே சிறுவன். வளைப்பானே, மாட்டானே '' என நினைந்து வேதனைதருகின்ற வில்லைநோக்கித் தன் மகளுக்கு மணம் நடக்குமோ, நடக்காதோ என்று வேதனைப் பட்டான் மன்னன். இக்கருத்து

'' போதக மனையவன் பொலிவு நோக்கியவ்
வேதனை தருகின்ற வில்லை நோக்கித் தன்
மாதினை நோக்குவான்.....................
.................................மேயினன் ''

என்ற செய்யுளில் இயம்பப்படுகிறது. இக்கருத்தைக் காளிதாசரது கவிதையிலும் காண்போம்.

"இரகுவம்சம்" என்னும் நூலில், "ஜனகர் இராமனது அழகிய சரீரத்தை நோக்கி, யாரும் எளிதில் வளைக்கமுடியாத வில்லைப் பணயமாக வைத்திருக்கிறேனே" (இல்லாவிடில் இவ் வழகனுக்கு மகளைத் தந்திருப்பேனே) என எண்ணி மிகவும் துன்புற்றார் என்ற கருத்து,

तस्य वीक्ष्य ललितं वपुः शिशोः पार्थिवः प्रथितवंशजन्मनः ।
स्वं विचिन्त्य च धनुर्दुरानमं पीडितो दुहितृशुल्कसंस्थया ॥

என்ற சுலோகத்தில் இயம்பப்படுகிறது. அடுத்து வில்லை வளைப்பதற்காக இராமன் வில்லைக் கையில் எடுத்த செய்தியைக் கூறுமிடத்துக் கம்பர்,

"ஆடக மால் வரை அன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதை எனும் போற்
சூடக வால் வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை இது என்ன எடுத்தான்"

என்கிறார். அதாவது, "மலைபோலக் கனமாயுள்ள அப்பெரிய வில்லை சீதைக்குச் சூட்டப்படும் மணமாலையைப் போன்று அனுயாசமாக இராமன் எடுத்தான்" என்கிறார். இதன் வாயிலாக இராமனது வலிமையைப் புலப்படுத்துகிறார். இந்நிகழ்ச்சியை காளிதாசர் வேறொரு பாங்கில் கூறுகிறார்.

आततज्यमकरोत् स संसदा विस्मयस्तिमितनेत्रमीक्षितः ।
शैलसारमपि नातियत्नतः पुष्पचापमिव पेशलं स्मरः ॥

அதாவது, "மலைபோல் வலிமையுள்ள வில்லை யாவரும் வியக்கும்வண்ணம் இராமன் எடுத்து நாணேற்றியது, மன்மதன் தனது மெல்லிய பூ வில்லை எடுத்து நாணேற்றுவது போன்று இருந்தது" என்கிறார். இதன் வாயிலாக இவரும் இராமனது வலிமையைப் புலப்படுத்துகிறார்.

இவை போன்று, மகாகவிகளின் எத்தனையோ கருத்துக்கள் ஒன்றியிருப்பது ஊன்றி நோக்கின் புலப்படும். எனவே, "மொழிவேறுபாடு இருப்பினும் மகாகவிகளின் வாக்குப் பெரும்பாலும் கருத்தில் ஒன்றுபட்டதாய்த்தான் இருக்கும்" என்கிற பேருண்மை இதனின்றும்புலனாகிறது என்றுகூறி முடிக்கிறேன்.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswami Devasthanam, Tirukadaiyur.

Myself and my family had the privilage of Visiting the great shrine Amirthagadeswarar and Abirami Amman on 11th and 12th September 1961. I am much greatful for the temple Authorities and they took keen interest over us and showed the temple.

I had seen and worshiped North Indian Temples and many South Indian Temples. If is a great thing that this temple is kept very clean and neat. I pray Almighty Lord to bless the Authorities and His Holiness in their task.

(Sd.) G. Vilvalingam,
Textile Engineer,
Barathi Mills, Pondicherry.

12—9—61

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

வித்துவான், சுந்தரசுவாமிகள்,

மடாதிபதி, கௌமார மடாலயம், கோயம்புத்தூர் - 6

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானங்களின் அருளாட்சியில் அமைந்து விளங்கும் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்துக்கு எங்கள் மடாலயத்து உயர்நிலைப்பள்ளி மாணவர், ஆசிரியர்கள் அன்பர்கள் ஆக ஐம்பதின்மருடன் வந்து இன்று தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றேன். தேவஸ்தான அலுவலர்களுடைய கவனிப்பு என்றும் மறக்கமுடியாது. சிறப்பான முறையில் பூஜைகள் செய்து அனைவருக்கும் திருவமுது ஏற்பாடுசெய்து வைத்தார்கள். கோயிலை மிகவும் தூய்மையாக வைத்திருக்கிறார்கள். தருமையாதீன குருமகாசந்நிதானங்களின் அருளாட்சிக்கு நன்றி.

24—9—61

(ஒ-ம்.) சுந்தரசாமி.

செய்திகள்

தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்குத் தங்கக் கவசத் திருப்பணித் தொடக்கம்

தருமையில் திருக்கோயில்கொண்டு அருள் வழங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவீக்கு நடைபெற்று வருகின்ற இரண்டாவது கோடி அர்ச்சனை பிலவ ஆண்டு 20 ஆம் நாள் (5—11—61) ஞாயிற்றுக்கிழமையன்று பூர்த்திவிழா நடைபேற்றது. அன்றே மூன்ருவது கோடி அர்ச்சனைத் தோடக்கமும் நடைபெற்றது.

மேலும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்குத் தங்கக்கவசம் சார்த்தவேண்டுமேன்பது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளம். அதன்படி 5-11-61 அன்று அம்பிகையின் சந்நிதியில் உண்டியல் வைக்கப்படுகிறது. அன்பர்கள் கலந்துகோண்டு பயன்பேறுவார்களாக.

வருகிற தைமாதத்தில் இராகுநீங்கலாக மற்ற 8 கிரகங்கள் மகரராசியில் சேர்வதால் தீயவிளைவுகள் ஏற்படாமல் உலக மக்களுக்கு நன்மைகள் ஏற்பட ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை சந்நிதியில் சகஸ்ரசண்டியாகந் தோடங்கி நிகழ்த்தப்பேறுகிறது.

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு சதசண்டியக்ஞம்

ஸ்ரீமகாலக்ஷ்மிதுர்க்காதேவிசந்நிதியில் 10—10—61முதல் 18—10—61 முடிய காலை மாலை சதசண்டியக்ஞம், சுவாசினீ குமாரீவடுபூஜை, வேதபாராயணம், தேவீமகாத்மிய பாராயணம், துர்க்காசூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியன நடைபெற்றன. ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனையும், ஸ்ரீவித்தியாசக்ரமாகிய மேருவிற்கு ஸஹஸ்ரநாமார்ச்சனையும், விசேஷ அபிஷேக ஆராதனை

களும், கொலு அலங்காரங்களும் நடைபெற்றன. 18—10—61 நண்பகல் மகாபூர்ணாகுதியும், சதசண்டி ஹவனபூர்த்தியும் நடைபெற்றன. 19—10—61 பகல் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு யாகக் கலசாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். நவராத்திரி நாட்களில் அன்பர்கள் திரளாக வந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின்
கலைமகள் விழா

தருமையாதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா, கலை - இலக்கியச் சொற்பொழிவுகள், தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஒவ்வொருநாளும் மாலை மணிக்குத் தொடங்கி நடைபெற்றது.

10-10-61 செவ்வாய்க்கிழமை மாயூரம் சிவநேசச்செல்வர் திரு. கேதாரம், V. இராமநாதஐயர் B. A. அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள். ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் " சமயமும் கலைகளும் " என்ற தலைப்பிலும், ஆதீனக் கல்லூரி மாணவர் மா. கிருஷ்ணமூர்த்தி ' குமரகுருபரர் " என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். ஆதீனத் தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியர்களால் கலை நிகழ்ச்சிகள் சில காண்பிக்கப் பட்டன.

11—10—61 புதன்கிழமை மன்னன்பந்தல். அ. வ. அ. கல்லூரி, முதல்வர், திரு. M. விசுவநாத பிள்ளை M. A. அவர்கள் சிறப்புரைக்குப்பின், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் " மருத்துவக்கலை " என்ற பொருளிலும், ஆதீனக் கல்லூரி மாணவர், சோ. இராசமாணிக்கம் " அபிராமிபட்டர் " என்ற பொருளிலும் பேசினர். ஆதீனத் தொடக்கப்பள்ளி மாணவர்களால் " தமிழின்பின் சென்ற திருவிளையாடல் " என்ற நாடகம் நடிக்கப்பெற்றது.

12—10—61 வியாழக்கிழமை மாயூரம், சிவார்ச்சனைச் செல்வர், திரு. T. S. தியாகராஜஐயர் அவர்கள் சிறப்புரைக்குப்பின் வித்துவான், திருமதி. ப. வசந்தா "ஆடற்கலை" யைப்பற்றியும்,

ஆதீனக் கல்லூரி மாணவர் நா. சுந்தரராமகிருஷ்ணன் "பாரதி"யைப் பற்றியும் பேசினர். வேளூர் அநாதையில்லத்துச் சிறுவர்கள் "சேரன் செங்குட்டுவன்" என்ற வரலாற்று நாடகத்தை உணர்ச்சியோடு நடித்தனர்.

13-10-61 வெள்ளிக்கிழமை மாயூரம் திரு A அரிகிருஷ்ணசாமி நயினர் அவர்கள் சிறப்புரைக்குப் பின்னர், சிரோமணி. K. இராஜகோபால சாஸ்திரி, "சோதிடக்கலை" என்ற பொருள் பற்றியும், ஆதீனக்கல்லூரி மாணவர் மு. பாலசுப்பிரமணியன் "ஒட்டக்கூத்தர்" என்ற பொருள் பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்களால் "தடாதகைப் பிராட்டியார்" என்ற நாடகம் நல்லமுறையில் நடிக்கப் பெற்றது.

14—10—61 சனிக்கிழமை மாயூரம் நகராட்சி உயர்பள்ளித் தலைமையாசிரியர். திரு. K. கணபதிச் செட்டியார் B. A, L. T., அவர்களின் சிறப்புரைக்குப் பின்னர், ஆதீனக் கல்லூரிமாணவர், வே. சௌந்தரராசன். "புகழேந்தி" என்றதலைப்பில் பேசினர். ஆதீன உயர்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் "கணைக்கால் இரும்பொறை" என்ற நாடகத்தை நடித்தனர்.

15—10—61 ஞாயிற்றுக்கிழமை திரு. அ. கலியபெருமாள் B. A., அவர்கள் (தமிழ்த்துறை. அ. வ. அ. கல்லூரி, மன்னன் பந்தல்). அன்றைய விழாப்பேச்சாகிய நாடகக்கலையைப்பற்றி சிறப்புரையாற்றினுர்கள். பின்னர் வித்துவான் சிரோமணி. திரு. வீ. சபேசன் "நாடகக்கலை" என்ற பொருளிலும், ஆதீனக் கல்லூரி மாணவர் சீ. சொக்கலிங்கம் "சிவாஜி" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினுர்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் "பாசறை" என்ற கற்பனை நாடகத்தைச் சிறப்புற நடித்தனர்.

16—10—61 திங்கட்கிழமை மாயூரம் திரு. கேதாரம் G. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் சிறப்புரைக்குப் பின் திரு. R. வேலாயுத ஓதுவார் "திருமுறைகளில் கலைகள்" என்ற பொருளிலும், ஆதீனக் கல்லூரி மாணவர் நல். கலியபெருமாள் "காளமேகம்" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். ஆதீனக் கல்விநிலைய பழைய மாணவியர் "வள்ளி" என்ற நாட்டிய நாடகத்தைக் கலைத்திறனேடு நடித்தனர்.

17—10—61 செவ்வாய்க்கிழமை வித்துவான், ஸ்ரீமத். மஹாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "ஓவியக்கலை" என்பது பற்றியும், திரு. R. இராமசேஷன் B. A., B. T., "சமூகக்கலை" என்பதுபற்றியும், ஆதீன உயர்பள்ளி மாணவர் கே. கோவிந்த ராஜன் "கலைமகள்" என்பதுபற்றியும், ஆதீன உயர்பள்ளி மாணவி G. வசந்தா "திருமகள்" என்பதுபற்றியும் பேசினர். ஆதீனக் கல்விநிலைய பழைய மாணவியர் "ருக்மிணி" என்ற நாட்டிய நாடகத்தைக் கலைத்திறனோடு நடித்தனர்.

18—10—61 புதன்கிழமை மாயூரம் திரு. பி. திருஞானம் பிள்ளை B. A., B. L., அவர்களின் சிறப்புரைக்குப் பின்னர், வித்துவான், திரு. சோ. சிங்காரவேலன் B. A., "கவிதைக்கலை" என்ற பொருளிலும், ஆதீனக் கல்லூரி மாணவர் ஜே. தியாக ராஜன் "கம்பர்" என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் "பவழத்தீவு" என்ற கற்பனை நாடகத்தை நடிப்புத்திறனோடும், உணர்ச்சி யோடும் நடித்தனர்.

19—10—61 வியாழக்கிழமை மாயூரம் தேசீய உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. M. K. நடராஜ அய்யர் M. A., L. T., சிறப்புரையாற்றியபின் திரு. V. கிருஷ்ணய்யர் B. A., L. T., "அறிவியற்கலை" என்ற தலைப்பில் பேசினார்கள். ஆதீனக் கல்விநிலைய பழைய மாணவ மாணவியர்களால் "இராஜராஜ சோழன்" என்ற நாடகம் சிறப்புற நடிக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நாடகத்தில் பங்கு கொண்டு நடித்தவர்களுக்கும், நாடகத்தை உடன் இருந்து நடத்தியவர்களுக்கும் பரிசுகள் வழங்கி ஊக்கம் தந்து ஆசி அருளினார்கள்.

ஆதீன தேவஸ்தானங்களில்

நவராத்திரி விழாச் சொற்பொழிவுகள்

வேளூரில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு விசேஷ

அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 15—10—61 ஞாயிற்றுக்கிழமை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் மெய்ப்பொருளியல் விரிவுரையாளர், திரு. சி. இராமலிங்கம் M. A., " சரசுவதி அந்தாதி ". 16—10—61 திங்கட்கிழமை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர், வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் " அன்னை அருள் ". 17—10—61 செவ்வாய்க்கிழமை காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. சீ. அருணைவடிவேல் முதலியார் " அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் " என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

சீகாழியில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமிதேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 16—10—61 திங்கட்கிழமை சிதம்பரம் பச்சையப்பன்உயர்பள்ளித்தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணியப் பிள்ளை " அம்மை அருள் ". 17—10—61 செவ்வாய்க்கிழமை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், வித்துவான், திரு. கோ. சுப்பிரமணியப் பிள்ளை M. A., B. L., " திலகவதியார் ". 18—10—61 புதன்கிழமை காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர் பள்ளித்தமிழாசிரியர், தருமையாதீனத்தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் " மீனுட்சியம்மை இரட்டை மணிமாலை " என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருப்பனந்தாளில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ பிருகந்நாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன.

நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 13—10—61 வெள்ளிக்கிழமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி விரிவுரையாளர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் " அம்மை அருள் ". 16—10—61 திங்கட்கிழமை திருவையாறு, அற நிலைய சமயப் பிரசாரகர், திரு. G. தனவேலர் " நவராத்திரிச் சிறப்பு ". 17—10—61 செவ்வாய்க்கிழமை கும்பகோணம் நகராட்சி உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. சோ. கணபதி தேசிகர் " மங்கையர்க்கரசியார் ". 18—10—61 புதன்கிழமை திருவிடைமருதூர், வித்துவான், திரு. மு. நடராச தேசிகர் " காரைக்காலம்மையார் " என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

திருபுவனத்தில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரிநாட்களில் ஸ்ரீதர்மசம்வர்த்தனி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 16—10—61 திங்கட்கிழமை திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், புலவர், திரு. அரங்கசாமி " சகலகலாவல்லிமாலை ". 17—10—61 செவ்வாய்க்கிழமை திருவையாறு சரசுவதிமால் நூல்நிலையத் தமிழாய்வாளர், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை " மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை ". 18—10—61 புதன்கிழமை திருவையாறு அறநிலைய சமயப் பிரசாரகர், திரு. G. தனவேலு " அன்னை அருள் " என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திருவையாற்றில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரி நாட்களில் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன.

நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை மேணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 15—10—61 ஞாயிற்றுக்கிழமை தஞ்சை, அறநிலைய சமயப்பிரசாரகர், திரு. A. S. ரங்கநாதாச்சாரியார் "அபயாம்பிகைப்பிள்ளைத்தமிழ்". 16—10—61 திங்கட்கிழமை தஞ்சை, கிறித்தவர்பெண்கள்உயர்பள்ளித்தமிழாசிரியர், வித்துவான், திரு. சோ. முத்தையா தேசிகர் B. A., "அம்மை அருள்". 17—10—61 செவ்வாய்க்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா M. A., "அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருக்குவளையில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் நவராத்திரிநாட்களில் ஸ்ரீ வண்டமரும்பூங்குழலாள் அம்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. நிகழ்ச்சியிற் குறித்தவண்ணம் சொற்பொழிவுகள் மாலை 6 மணிக்குத் தொடங்கி நடைபெற்றன. 16—10—61 திங்கட்கிழமை நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திரு. வை. மு. சண்முகதேசிகர் "அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ்". 17—10—61 செவ்வாய்க்கிழமை திருவாரூர் மாவட்டக் கழக உயர்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான் திரு. மு இரத்தின தேசிகர் "அம்மை அருள்". 18—10—61 புதன்கிழமை பேரளம் மாவட்டக் கழக உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. M. குஞ்சிதபாத தேசிகர் "சரசுவதி அந்தாதி" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

திருக்கடவூரில்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின்
ஜன்மநட்சத்திரத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஜன்மநட்சத்திரத் திருநாள் 5—11—61 ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கம்போல்,

சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடும், ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி, ஸ்ரீ அபிராமி அம்பிகைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நிகழ்ந்தன. மிருத்யுஞ்சயஹோமம் ஸ்ரீ காலசம்காரமூர்த்தி சந்நிதியில் சிறப்பாக நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளி வழிபட்டார்கள். திருநாள் நினைவு மலராக " துன்பநீக்கப் பதிகங்கள் " வெளியிடப்பட்டு அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தினர் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 5—11—61 இல் மேலூர், ஞாயிறு, திருவொற்றியூர் முதலிய தலங்களில் சிறப்பாக நிகழ்த்தினர். 7—11—61 இல் ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூசைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 8—11—61 முதல் கந்தசஷ்டி விழா தக்க பல அறிஞர்கள் விரிவுரையுடன் இனிது நிகழ்கிறது.

தருமை ஆதீனத் தமிழ்க் கல்லூரி மாணவர்களின்

சுற்றுலா, வழிபாடு

23—10—61 திங்கட்கிழமையன்று காலை 11 மணியளவில் சுற்றுலாவில் பங்குகொண்ட மூன்று ஆசிரியர்களும் இருபத்திரண்டு மாணவர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தை வணங்கி அவர்களின் அருளாசி பெற்று, ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகையை வழிபட்டார்கள். அன்று மதியம் திருமடத்தில் விருந்துண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளால் அன்றிரவுக்கு வேண்டிய உணவும் தயாரித்துக் கொடுக்கப்பட்டது. அவற்றை ஒவ்வொரு மாணவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய பிரசாதப்பைகளில் வைத்துக்கொண்டனர். பிறகு தருமையில் மாலை 4-30 மணியளவில் பிரசாரவானில் புறப்பட்டு 5-30 மணியளவில் மாயூரம் சந்திப்பை அடைந்தார்கள். சந்திப்பில் இரண்டு புகைப்படங்கள் எடுக்கப்பட்டன.

மாலை 6 மணியளவில் கல்லூரி மாணவர் தி. எத்திராசன் மற்றும் சிலரும் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் அவர்களுக்கு மலர்மாலை போட்டு வழியனுப்பினார்கள். புகைவண்டியிலேறி மறுநாட்காலை தென்காசி சென்றடைந்தார்கள். மாயூரத்திலிருந்து தென்காசி செல்லும்போழுது ஸ்ரீவில்லிபுத்தூர் புகைவண்டி நிலையத்தை அடைந்ததும், அவ்விடம் தருமை ஆதீனக் குரு முதல்வர் திருவவதாரம் செய்த இடமாகையால் ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரும் "சீரணியும்" என்று தோடங்கும் பாடலை ஒருங்கே பாடி வணங்கினர். தென்காசியில் பராக்கிரம பாண்டியன் கட்டிய பழங்கோயிலில் அழகிய சிற்பங்களைக் கண்டார்கள். பின் அங்கிருந்து மூன்றுமைல்களுக்கு அப்பால் உள்ள திருக்குற்ருலம் சென்று அங்குள்ள வடஅருவி, ஐந்தருவி முதலிய அருவிகளில் அனைவரும் நல்லவண்ணம் நீராடினார்கள். மற்றும் மலையின் இயற்கையழகையெல்லாம் கண்டு, அன்று இரவு 7 மணியளவில் குற்ருலநாதரை வழிபட்டார்கள்.

மறுநாட்காலை திருக்குற்ருலத்தைவிட்டுப் புறப்பட்டுத் தென்காசிவந்து புகைவண்டியிலேறித் திருநேல்வேலி, ஸ்ரீவைகுண்டம் வழியாகத் திருச்சேந்தூர் சென்றடைந்தார்கள்' அங்குக்கடலிலும் நாழிகைக்கிணற்றிலும் நீராடினார்கள். அன்றிரவு திருச்சேந்தூர் முருகனை ஆசிரியர்களும், மாணவர்களும் பாடல்கள் பாடி இனிது தோழுதார்கள். இரவு 7 மணியள்வில் அங்கிருந்து புறப்பட்டு 10 மணிக்குத் திருநேல்வேலி வந்து அங்குள்ள தருமையாதீன மடத்தில் தங்கினார்கள்.

மறுநாட்காலை திருநேல்வேலியில் (பேருந்துவண்டிமூலம்) காலை 5-30 மணிக்குப் புறப்பட்டு 9 மணிக்குக் கன்னியாகுமரி சென்று அங்கும் யாவரும் கடலில் நீராடிக் குமரித்தேய்வத்தைப் பல பாடல்கள் பாடி வணங்கினார்கள். பிறகு அங்குக் காந்தி நினைவாகக்கட்டப்பட்டிருக்கும் "காந்திபவன"த்தையும், மற்றும் பல போது இடங்களையும் (விவேகானந்தர் பாறை) கண்டார்கள். அங்கிருந்து பன்னிரண்டுமைல் தொலைவிலுள்ள சுசீந்திரம் சென்று கோயிலிலுள்ள அழகிய சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள். பிறகு நாகர்கோயில் சென்று நகைச்சுவை நடிகர் N. S. கிருஷ்ணன் எழுப்பிய காந்தி நினைவுத் தூபியைக் கண்டார்கள். அன்று மாலை 3-30 மணியளவில் உந்துவண்டிமூலம்

புறப்பட்டுப் பாபநாசம் சேன்று அன்றிரவு தருமையாதீனக் கிளை மடத்தில் தங்கினார்கள்.

மறுநாட்காலை பாபநாசம் அணைக்கட்டைக் கண்டார்கள். படகுமூலம் மூன்றுமைல்கடந்து, செல்லுதற்கு அரிய இடமாகிய பாணதீர்த்தத்தை அடைந்து யாவரும் அருவியில் மூழ்கினார்கள். படகில் செல்லும் போழுதும், வரும போழுதும் பன்னிரு திருமுறைப் பாடல்களும், சண்முக கவசம் முதலிய பாடல்களும் பாடினார்கள். அங்குள்ளோர் அவ்விடம் (பாணதீர்த்தம்) சென்றுவந்தது குருவருளும் திருவருளும் ஒன்றுகூடிய செயலே யாகும் என்று கூறுகிறார்கள்.

பிறகு அகஸ்தீஸ்வரம் வந்து அங்குள்ள அருவியில் நீராடி அகஸ்தீஸ்வரரை யாவரும் வணங்கினார்கள். பின்னர் பாபநாசம் அடைந்து, உடன் மதியம் 3 மணியளவில் மணிமுத்தாறுசென்று அங்குள்ள அணைக்கட்டைக்கண்டு மகிழ்ந்தார்கள். அங்கிருந்து நான்குமைல் நடந்து கல்லிடைக்குறிச்சி சென்று புகைவண்டி மூலம் திருநெல்வேலி அடைந்தார்கள். அன்றிரவு திருநெல்வேலி யிலிருந்து பிரயாணஞ்செய்து மறுநாள் விடியற்காலை 5 மணி அளவில் திருப்பரங்குன்றம் அடைந்தார்கள். அங்குள்ள சரவணப் போய்கையில் நீராடி, முருகனைப் பாடல்கள் பல பாடி வணங்கினார்கள். சிற்பங்கள் பலவற்றையும் கண்டு மகிழ்ந் தார்கள். பிறகு மதுரை சென்று சிறிதுநேரம் தங்கி, அடுத்து அழகர்கோயில் சென்றார்கள். அங்கு "நின்றவண்ணம் காட்டும்" பெருமானை இனிது வணங்கினார்கள். சிற்பங்கள் பலவற்றையும் கண்டு மகிழ்ந்தார்கள். மலைமீது மூன்றுமைல் கடந்து நூபுர கங்கையில் நீராடி, பழமுதிர்சோலையில் உள்ள முருகனைத் தோழுதார்கள்.

பிறகு அழகர்கோயிலிலிருந்து மதுரை சென்று, மதுரையில் திருமலைநாயக்கர் மகாலையும் மற்றும் ஒரு சில போதுவிடங்களை யும் கண்டார்கள். அடுத்து மதுரை ஆதீன மடாலயம் சென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையும் வணங்கினார்கள். பிறகு மீனாட்சியம்மையையும், சோக்கநாதரையும் மிக்க சிறப்பான முறையில் அர்ச்சனைகள்செய்து மூலத்தானத்திற்கு அண்மையில் சென்று வழிபட்டார்கள். பின் அன்றிரவு 11 மணியளவில் மதுரையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை 10 மணியளவில் மாயூரம் சந்திப்பை அடைந்தார்கள்.

ஓங்கும் கீர்த்திபத்ரம் கிடைக்கும். ஆயில்யம் நான்கு பாதங்களும் சுப சோபனுதிகளைத்தரும். இல்லறம் ஓங்கும். நஷ்டமான பொருள் தானேவந்து சேரும், வியவஹாரம் ஜெயிக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும்; ஆரோக்யம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். பூரம் நான்கு பாதங்களும் உத்திரம் முதல் பாதமும், கவலை காட்டும். ஆரோக்யக்குறைவு ஏற்படும். அதிகச் செலவினங்களும், சத்ரு பாதையும் உண்டாகும். சனி. செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். விவாஹாதி சுப சோபனங்களும் ஆடை ஆபரணச் சேர்க்கைகளும், தன தான்ய விருத்தியும், காரியானுகூலமும் தேய்வசக்தி பிரகாசித்தலும், மகாதானுதி புண்ணியபலன்களும், விசாலமானகீர்த்தியும், ஏற்படச்செய்யும். ஈதிபாதைகள் விலகும். புதன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4, பாதங்கள் மிச்ரபலனைத்தரும். விக்னம் உண்டுபண்ணும். சுவாதி நான்கு பாதங்களும் ஆரோக்ய உண்டுபண்ணும். தெய்வீகத்தன்மை ஓங்கும். அசாத்ய மெல்லாம் சுலப சாத்தியமாகும்; உலக பிரசித்தியும் கீர்தியு உண்டுபண்ணும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் தூரபிரயாணத் தரும் தொழில் மாறச்செய்யும். ஆரோக்யக்குறைவு காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் கிரகசுகத்தைத் தரும். குடும்பம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். மனம் சாந்தி அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் கவலையோடு போய்க்கொண்டு இருக்கும். பூராடம் நான்கு பாதங்களும். உத்திராடம் முதல் பாதமும் ஆரோக்கியத்தைத் தரும். கிரய விக்கிரயங்கள் உண்டுபண்ணும். வெகுகாலம் எதிர்பார்த்து நடவாத காரியம் சாத்தியமாகும். புத்திராதிகளால் சந்தோஷம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும் திருவோணம் நான்கு [illegible]ங்களும் மகத்தான சந்தோஷத்தை உண்டுபண்ணும். உத்தியோக மேன்மையும் மேலோர் பெரியோர் அன்பும், தெய்வ அனுகூலமும் தானாக வந்து சேரும். அவிட்டம் 1, 2 பாதங்கள் அதிக அலைச்சலையும் காரியவிக்னங்களையும், பொது ஜனங் களுடைய அபவாதத்தையும் தரும். புதன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் ஆரோக்யத்தைக் கொடுக்கும். குடும்ப சுகத்தைத்தரும். தொழில் ஓங்கும். சதயம் நான்கு பாதங்களும் அதிக உழைப்பைத் தரும்; எங்கும் பிரசித்தியை உண்டுபண்ணும். மனம் உற்சாகமாய் இருக்கும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் கிரகசுகத்தைத் தரும். தனதான்ய விருத்தி யாகும். துர்புத்தியும் உண்டாக்கிக் காரியவிக்னத்தையும்தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம்பாதம் தூரப்பிரயாணத்தைத் தரும். சென்ற இடங்களில் ஈதிபாதைகள் அதிகமாகும். சிறு நஷ்டங் களும் ஏற்படும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும், ரேவதி நான்கு பாதங்களும், தெய்வபலத்தால் சகல காரியங்களும் சாத்யமாகும். உத்தியோக உயர்வு, தொழில்மேன்மை, மேலோர் பெரியோர் அன்பு, கிரய விக்ரயங்கள் நஷ்டதன வரத்து இவைகள் ஏற்படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- கார்த்திகை மாதம் தேய்வீகத்தன்மை உள்ள இடங்களைப் பிரகாசப்படுத்தும். இயற்கைகள் பலதேசங்களிலும் மாறுபட்டு, அனேகவிதமான உத்பாதங்களைக் காட்டும். உலகமே மனிதனின் விக்ஞான பலத்தால்தான் நடந்து வருகிறது என்பதைப் பொய்யாக்கும். எல்லாம் கடவுள் செயல் தான் என்று நாஸ்தீகர்களையும்கூட நம்பும்படியாக உலகம் நடக்கும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

" ஞானசம்பந்தம் "

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளி வருவது. சைவ சமயச் சார்பாக எழுதப்பெறும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சமயங்களின் உண்மைகளை உணர்வ தற்குப் பெருந்துணையானது.

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்ப தோடு தங்கள் முகவரியையும் தெளிவாக மணியார்டர் கூப்பனில் எழுதுதல் வேண்டும். பழைய சந்தாதாரர்கள் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா எண்ணைக் குறித்தல் வேண்டும். ஏதேனும் விபரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் தலைகள் அனுப்புதல் வேண்டும்,

ஆண்டுக் கையொப்பம் :-

உள்நாடு ரூ. 2—25. வெளிநாடு ரூ. 3—00.

செயலாளர்,

" ஞானசம்பந்தம் " காரியாலயம்.

தருமபுரம், மாயூரம் P. O.

EXTRACT FROM VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

It is extremely rapturous to visit this temple enroute to Southern India and it is the best kept temple anywhere we came across and the management are very courteous and really the visit inculcates not only religious fervour but culture also. May God bless Management with still more vigour.

(Sd.) A. Gopalakrishnan,
10—10—61 Masulipatnam A. P.

What impressed me most was the especially divine atmosphere of the temple. The cleanliness and order is unique and all credit is due to the management. May God inspire them to continue to take the same interest in future.

(Sd.) A. D. Pisharady,
11—10—61 Director of Postal Services, Madras.

I had the good fortune and God's immense grace to have occasion to see this important temple. It is kept in a condition which reflects great credit on the management and is becoming of the greatness and importance of the Deity within it.

(Sd.) K. V. Kannappan, I. A. S. (Retd.)
12—10—61.

I am fortunate in getting several opportunities to visit this holy shrine with my family. This is my 4th visit. May the Lord give further more opportunities of dharshan.

(Sd) N. S. Ramaswamy,
13—10—61 District Judge, Nagapattinam.